மேழிச்செல்வம்

மாத இதழ்

P.759.
22 NOV 1962
MADRAS

சுபகிருது ஹூ ஐப்பசிமீ

சென்னை மாநில பயிர் விளைச்சல் போட்டி பரிசளிப்பு விழா

சென்னை ராஜாஜி ஹாலில் 13—9—62-ல் நடைபெற்ற 3-வது இந்திய புகையிலை ஆராய்ச்சியாளர்களின் மகாநாட்டில் மாநில நிலக்கடலை விளைச்சல் போட்டியில் ஏக்கருக்கு 3,867 ராத்தல் விளைவித்து முதற்பரிசு பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஏ. எம். பி. செட்டி அவர்களுக்கு மத்திய உணவு விவசாய அமைச்சர் திரு. எஸ். கே. படீல் அவர்கள் பரிசளிக்கிறார்.

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1962-ம் ஹூ அக்டோபர்-நவம்பர்மீ



சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்ற 3-வது புகையிலை ஆராய்ச்சியாளர்களின் மகாநாட்டிற்கு மாநில வேளாண் துறை அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகிறார்.



மகாநாட்டிற்கு வந்திருந்த பிரமுகர்களின் ஒரு பகுதி.

மாநில கரும்பு விளைச்சல் போட்டியில் 104 டன் விளைவித்து, முதற் பரிசு பெற்ற செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஏ. ஆர். பி. நாயுடு அவர்களுக்கு மத்திய உணவு, விவசாய அமைச்சர் திரு. படீல் பரிசளிக்கிறார்கள்.

p. 759.

உள்ளுறை

	பக்கம்.
சென்னை மாநில பயிர் விளைச்சல் போட்டி பரிசளிப்பு விழா	5
குள்ளக்கார்	6
திருந்திய முறைக் கரும்பு சாகுபடியும் நிரம்ப இலாபமும்	8
நிலக்கடலைக்கு முதற் பராமரிப்பு	12
லட்சுமி பருத்தியை பயிரிடாதீர்கள்	14
உரமிடுதல் பற்றிய சில நல் விதிகள்	16
நெடுங்காலக் காய் கறிகள்	17
1962-ம் வருடம் நவம்பர் மாதம் விவசாய இலாகாவில் கிடைக்கும் விதைகளும் செடிகளும்.	18
கேள்வி அரங்கம்	20
கார்த்திகை—மார்கழி மாதம் விவசாயக் குறிப்புகள்	22
வழி காட்டி. (நாடகம்)	26
திறமையான விவசாயப் பண்ணை நிர்வாகத்திற்கு விளை நில பதிவுப்புத்தகமே	28
உள்ளூர் எருக்கள் அபிவிருத்தித் திட்டம் கலவை எரு பயிற்சி முகாம் ..	29
அறந்தாங்கியில் விவசாயக் கண்காட்சி	31

விளம்பரங்கள் :

உங்கள் தந்தி	4
ரங்கசாமி அண்டு கம்பெனி	7, 30
ராஜா பண்ணைத் தோட்டம்	11
கிலோ கிராம்	13
சூரியன் மார்க் (கலப்பு உரங்கள்)	14
பொட்டாஷ்	15
சூபர் பாஸ் பேட்	21
ராலீஸ் இந்தியா லிட்	24
பாரீஸ்	25


உங்கள் தந்தி
எந்த இந்திய
மொழியிலும்
உங்கள்
செய்தியை
அனுப்பலாம்
ஆனல் செய்தி
தேவநாகரி
எழுத்தில்
எழுதியிருக்க
வேண்டும்
தபால் தந்தி இலாகா

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனா
லுழந்தும் உழவே தலை.

மலர் 19 | சுபகிருது௵ ஐப்பசி௴ —1962—அக்டோபர்-நவம்பர் | இதழ் 10

சென்னை மாநில பயிர் விளைச்சல் போட்டி பரிசளிப்பு விழா

3-வது இந்திய புகையிலை ஆராய்ச்சியாளர் மகாநாட்டை செப்டெம்பர் மாதம் 13-ம் தேதி, மத்திய உணவு விவசாய அமைச்சர் திரு. எஸ். கே. படீல் அவர்கள் துவக்கி வைத்தார். மாநில வேளாண்துறை அமைச்சர், திரு. பி. கக்கன் அவர்கள் இதற்குத் தலைமை தாங்கினர். வேளாண்துறை நெறியாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் வரவேற்புரையளித்தார். இம் மகாநாட்டையொட்டி சென்னை மாநில நிலக்கடலை, கரும்பு பயிர் விளைச்சல் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு மத்திய அமைச்சர் திரு. எஸ். கே. படீல் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

சென்னை விவசாயத்துறை, முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே இப் பயிர் விளைச்சல் போட்டிகளை ஆரம்பித்து, நெல், சோளம், கம்பு, கரும்பு, நிலக்கடலை முதலியவற்றின் சாகுபடியை பெரிதும் ஊக்குவித்து வந்துள்ளது.

மாநில நிலக்கடலை மகசூல் போட்டியில் 118 தாலுக்காக்களிலிருந்து 2711 போட்டி தார்கள் பங்கெடுத்துக் கொண்டனர். இவர்களுள் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திரு ஏ. எம். பி. செட்டி அவர்களே முதற்பரிசு பெற்றார். அவருக்கு ஏக்கருக்கு 3,867 ராத்தல் கடலை விளைந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஏ. ஆர். பி. நாயுடு அவர்கள் ஏக்கருக்கு 104 டன் கரும்பு விளைவித்து முதற்பரிசு அடைந்தார்.

அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் தம் உரையில், இம் மாநில பயிர் விளைச்சல் போட்டிகளில் பங்கு கொண்டவர்களுள் பலர் அகில இந்தியாவிலேயே நெல், சோளம், நிலக்கடலை, கரும்பு முதலிய பயிர்களில் உயர்ந்த விளைச்சலை அடைந்துள்ளனர் என்பதைக் குறிப்பிட்டார். இம் மாநிலத்தில் நல்லுக்கும், நிலக்கடலைக்கும் அமைந்துள்ளதைப் போன்ற தீவிர விவசாயத் திட்டம் ஒன்று பருத்தியிலும் கூடிய சீக்கிரம் அமுலாக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்று வேளாண்துறை நெறியாளர் தம் வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

மத்திய அமைச்சர் திரு. படீல் அவர்கள் பரிசு பெற்றவரைப் பாராட்டிப் பேசுகையில், பரிசு பெற்ற விவசாயிகள் போட்டியில் தங்களுக்குக் கிடைத்துள்ள பெரும் மகசூலை சாதாரணமாகவே தங்கள் நிலங்களினின்றும் வருடா வருடம் தொடர்ந்து பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கூறினர்.

திரு. ஏ. எஸ். பண்டிட் சிறப்புச் செயலாளர், மத்திய உணவு விவசாய அமைச்சரவை, திரு. ஜே. எஸ். படேல், மத்திய புகையிலைக் குழு தலைவர் முதலியோரும் உரையாற்றி விழாவில் கலந்து கொண்டனர்.

குள்ளக்கார்

திரு ஆர். சங்கரநாராயணன், பி.எஸ்ஸி., (அஜி.)

செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களடங்கிய மதருஸ் பிரிவில் சம்பா, சொர்ணவாரி, நவரை என்ற மூன்று பருவங்களிலும் நெல் பயிராகிறது. குள்ளன்கார் அல்லது குள்ளக்கார் என்பது சொர்ணவாரி, நவரையில் பயிராகும் குறுகிய காலப் பயிர்களுள் ஒன்று. இவ்விரு மாவட்டங்களிலும் மொத்தம் நெல் பயிராகும் 1,294,395 எக்கர்களில் 7.4%, அதாவது 91 272 ஏக்கர்களில், இந்த ரகம் பயிராகிறது. இது சிவப்பரிசி ரகத்தைக் காட்டிலும் குறைந்த வயதுடையது.

சாகுபடி விவரங்கள்

	சொர்ணவாரி (ஏப்ரல், மே—ஆகஸ்டு)	நவரை (டிசம்பர்—மார்ச்)
வயது	90—95 நாட்கள்	110 நாட்கள்.
விதைப்பு	சித்திரை, வைகாசி	தை 15-ம் தேதிக்குப் பின் முளை வந்த வித்து நேரடியாக வயலில் விதைக்கப் படுகிறது.
	நல்ல நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் நடவு முறை கையாளப்படுகிறது. இம் முறையில் அதிக மகசூல் கிடைக்கிறது.	
நடவு	30 நாளைய நாற்று நடவிற் கேற்றது.	மாசி 2-வது வாரத்தில் 25 நாளைய நாற்று நடவிற் கேற்றது.
அறுவடை	ஆடி, ஆவணி	சித்திரை
மகசூல்	20—22 மூட்டைகள்	10—12 மூட்டைகள்.

(1 மூட்டை—64 பட்டணம் படிகள்)

கத்திரி நாட்களில் குள்ளக்காரின் நேரடியாக விதைத்த பயிரோ, நட்ட பயிரோ நல்ல மகசூல் அளிப்பதாகத் தெரிகிறது. சம்பாவில் போதிய தண்ணீர் வசதியில்லா இடங்களில் இது நேரடியாக விதைக்கப்படுகிறது. இப்பட்டப் பயிரின் நெல் மணிகள் நன்கு நிறைந்தும், பதரின்றியுமுள்ளன.

குள்ளக்கார் பொதுவாக நஞ்சையில் பயிராகிறது. ஆனால் தென்னேரி, வந்தவாசி பகுதிகளில் மானாவாரியாகவும் விதைக்கப்படுகிறது.

செய்யாற்றில் ஊடுநெல் சாகுபடி.—இத் தாலுகாவில் 3 பங்கு குள்ளக்கார் விதையுடன் ஒரு பங்கு நீண்ட கால ரகமான ஒட்டடன் அல்லது ஒற்றனை விதைகலந்து வைகாசி, ஆனியில் விதைக்கப்படுகிறது. ஒட்டடன் சிவப்பு அரிசி கொண்ட ஒரு 8 மாத காலப்பயிர். ஆடி, ஆவணியில் குள்ளன்கார் அறுவடைக்கு வருகிறது. ஒட்டடன் அப்பொழுதுதான் கிளைத்தெழுகிறது. இச்சமயம் இரு ரகங்களும் அறுவடை செய்யப்படுகின்றன. இதன்பின் ஒட்டடனுக்கு உரமிட்டு கவனிப்பதன்மூலம் அது துளிர்த்து கிளைத்துக் கதிர் விடுகிறது. இரு ரகங்களின் மொத்த மகசூல் 2,000 ராத்தல்.

குள்ளன்காரின் இதர குணங்கள்.—மில்லில் குத்திய நெல்லில் பாதி கன அளவிற்கு மேல் அரிசி காண்கிறது. (டி.கே.எம். 6 பாதியும், வெள்ளைக்கார் பாதிக்கும் குறைவாகவே காண்கிறது). இந்த ரக நெல் புழுங்கல் அரிசிக்கும், இட்லி, தோசை, பழைய சோற்றிற்கும் ஏற்றது. தண்டு துளைக்கும் புழுவைவிடக் கொள்ளைநோய் இதனை எளிதில் தாக்கும். விவசாயிகளைக் கேட்டறிந்ததில் ஏக்கருக்கு ரூ. 200 முதல் 250 வரை சாகுபடி செலவென்றும், ரூ. 100—200 மொத்த லாபமாகக் கிடைக்கிறதென்றும் தெரியவருகிறது.

மற்ற நெல் ரகங்களைப் பயிரிட முடியாத காலத்திலும் குள்ளக்காரை குறைந்த செலவில், அதிக கவனமின்றி, எல்லா மண் வகைகளிலும் பயிரிட இயலும். இக்காரணங்களால் இதனை "ஏழைக்கான பயிர்" என்று குறிப்பிடுகின்றனர்.

விளம்பரக் கட்டண விகிதங்கள்

	ஒரு முறை வெளியீட். ரூ.
உள் தாள்களில் (inside pages) முழுப் பக்கம்.	120
உள் தாள்களில் அரை பக்கம் ..	60
உள் தாள்களில் கால் பக்கம் ..	30
உறைத்தாள் (cover page) உள் பக்கம் முழுவதும்.	150
பின்புற உறைத்தாள் (back cover page) வெளிப் பக்கம் முழுவதும்.	200

மாருத் சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலேயத்திஞல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னே விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்
(No. C. 1206691/61— 14—4—1962)

(சென்னே விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம் காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)



குணங்கள் :—

1. சராசரி அழுத்தத்தில் வேலே செய்யத் தகுதியான ஆப்ப ரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்ஸில் கைவிரல் களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டிஞல் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.

61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூட்ஸ் வாத்து கழுத்து போன்ற வளேந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



விலே விவரம் :—

(சென்னே அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலே)

18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	280	ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	280	ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு — — —	280	ரூபாய்

செயலாளர்கள் :—

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னே, மைசூர் விநியோகஸ்தர்கள் :—

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

திருந்திய முறைக் கரும்பு சாகுபடியும் நிரம்ப இலாபமும்

(D. சுந்தரம், மத்திய கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை, கடலூர்.)

நமது நாட்டில் அநேக உழவர்கள் கரும்பு சாகுபடி செய்கின்றனர். ஆனால் அவர்கள் கரும்பில் "குறைந்த செலவு நிறைந்த விளைவு" காண்பார் என்ற அடிப்படையில் முழு ஊக்கத்துடன் பயிரிடுவதில்லை எனப் பெரும்பாலும் தெரியவருகிறது. இதற்கு மாறாக வகைதெரியாமல் நிரம்ப பணம் செலவுசெய்து குறிப்பிட்ட பலனைப் பெறமுடியாது தவிக்கின்றனர். இக்குறையைத் தவிர்த்து, நல்ல பலனை உழவர்கள் அடையும் முறைகளைக் காண்போம்.

நிலவளம்

(1) இருமண் கலப்பு நிலம் (Loam) மிக ஏற்றது. இது தவிர சற்றுக்களிப்போ, அல்லது மணலோ கலந்து இருப்பினும் பாவமில்லை. ஆனால் களர் நிலங்களும், சதுப்பு நிலங்களும் கரும்பு பயிரிடத்தகாத நிலங்களாகும். முக்கியமாக எவ்வகை நிலமாக இருப்பினும் வடிகால் வசதி மிக அவசியம்.

நீர்வளம்

கரும்பு ஒரு நன்செய்ப் பயிர். ஆனால் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடாது. மழையைப் பொறுத்து வாரம் ஒரு முறையோ அல்லது 10 நாட்களுக்கு ஒரு முறையோ தண்ணீர் பாய்ச்சவேண்டும் இருப்பினும் மழையின் அளவைக்கொண்டு இந்த அளவு கூடலாம்; குறையலாம்.

நிலத்தைப் பண்படுத்துதல்

நிலத்தில், கரும்பு நடவிற்குச் சுமார் 3 மாதங்கட்கு முன்னதாகவே பசுந்தாள் உரப் பயிர்களைப் பயிரிட்டு அவைகள் பூக்கும் தருணத்தில் அப்படியே மடக்கி உழவேண்டும். பசுந்தாள் உரப் பயிர்களைப் பற்றியக் குறிப்புக்கள் உள்ள அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது :—

நில வகை.	பசுந்தாள் பயிர்.	விதைத் திட்டம் ஒரு ஏக்கருக்கு.	குறிப்பு.
மணல் நிலம்.	சணப்பு, காரா மணி.	34 முதல் 45 பவுண்டு.	நன்கு ஒரு மழை பெய்தவுடன் விதைப்பது மிக நல்லது.
களிப்பு நிலம்.	தக்கைப் பூண்டு, செஸ் பேனியா.	35 முதல் 40 பவுண்டு.	....
இருமண் கலப்பு நிலம்.	சணப்பு, செஸ் பேனியா.	30 முதல் 40 பவுண்டு.	....



" டிஸ்கு ' (Disc) கலப்பை பொருத்திய டிராக்டரால் நிலத்தை உழுதல் ".

உழவு

நவீன இயந்திரமான டிராக்டரைக் கொண்டு, பசுந்தாள் பயிர்கள் பூக்கும் தருணத்தில் உழவேண்டும். சுமார் இருமுறை உழுத பின்னர், பெருங் கட்டிகளை உடைக்க (Harrow) "ஹேரோ" என்ற சாதனம் அமைந்துள்ள கருவியை டிராக்டரில் பொருத்தி உழவேண்டும்



பெருங்கட்டிகளை உடைக்க "ஹேரோ" (Harrow) என்ற கருவி பொருத்திய டிராக்டரால் உழுதல்.

மேற்கண்ட செயல்களினால் நிலத்தில் சிறுசிறு மேடு பள்ளங்கள் உண்டாகும். இதைச் சமப்படுத்த 'மண்வாரி' (Buckscraper) என்ற கருவியைக் கொண்டு, உழவு செய்ய வேண்டும்.



நிலத்தை சமப்படுத்த "மணவாரி" (Buckscraper) என்ற கருவியை உடயோகப்படுத்தல்.

பார் அமைத்தல்

டிராக்டரின் உதவியாலோ அல்லது 'விக்டரி' கலப்பையாலோ பார்கள் எடுக்கலாம். 'விக்டரி' கலப்பையை உடயோகித்தால் செலவு சிக்கனம். டிராக்டர் மூலமாக ஒரு ஏக்கருக்கு ஆகும் செலவு ரூ. 16 முதல் 20. 'விக்டரி' கலப்பை மூலமாக ஆகும் செலவு ரூ. 4 முதல் 6.



"விக்டரி" கலப்பையினால் உழவு மாடுகளைக் கொண்டு பரர் அமைத்தல்.

பார்கள் பின்கண்டபடி அமையப் பெற்றிருக்கவேண்டும்

நீளம்.—50 லிங்க்ஸ் அல்லது 33 அடி 4 அங். (சுலபமாக தண்ணீர்பாய).

இடைவெளி (அகலம்).—5 லிங்க்ஸ் அல்லது 3 அடி 4 அங்குலம்.

ஆழம் 10" முதல் 12"

முக்கிய கவனிப்பு என்னவென்றால், கால்கள் (பார்கள்) ஆழமாக இருந்தால்தான் கரும்பு விழாது. மேடுபள்ளம் இல்லாமல் இருப்பதும் மிக அவசியமாகும்.

விதைக்கரணையும் நடவும்

(1) ஆறு முதல் எழு மாத வயதுள்ள கரும்பில் இருந்து எடுத்தல் அல்லது வயது வந்தக் கரும்பில் நுனிபாகத்தை உபயோகித்தல்.

(2) பூச்சி, பூஞ்சண நோய்களால் தாக்கப்படாதக் கரும்புகளாகத் தேர்ந்தெடுத்தல்.

(3) திடகாத்திரமான, பருத்த கரும்புகளைத் தேர்ந்தெடுத்தல்.

(4) விதைக்காகத் தேர்ந்தெடுக்கும் கரும்பின் மேலுள்ள சோலைகளை உரிக்காமல், அவைகளைக் கரணைகளாகக் கொல்லையிலேயே நறுக்கித் தயார் செய்தல். இதனால் கரும்பின் [illegible]ருக்கள் சேதமடைவது, அதாவது நசுக்கப்படுவது [illegible]ந்து, முளைப்பு அதிகம் உண்டாகும்.

(5) அரிடான், அகலால், ஆர்விசான் போன்ற ஏதாவது ஒரு இரசாயன மருந்தைத் தண்ணீரில் கலக்கி அதில் கரணைகளை அமுக்கி எடுத்துப் பின்னர் நடவு செய்ய வேண்டும். இதனால் கரும்பின் முளைப்புத் திறன் அதிகமாவதுடன் கறையானின் உபாதையும் தடுக்கப்பட்டு நோய் எதிர்க்கும் சக்தியை அடைகிறது.

ஒரு ஏக்கர் கரணைக்கு (5,000) 4 அல்லது 5 அவுன்ஸ் மருந்து போதுமானது.

இரண்டு அவுன்ஸ் மருந்துக்கு $2\frac{1}{2}$ காலன் தண்ணீர் வீதம் கலக்கவேண்டும்.

(6) இப்போது பார்களில் அடுக்கப்பட்டிருக்கும் கரணைகளின் மேலுள்ள சோலைகளை எடுத்துவிடவேண்டும்.

(7) 50 லிங்க்ஸ் கொண்ட பார் ஒன்றுக்கு 3 பருக்கள் கொண்ட கரணைகள் 37-40 போடவேண்டும்.

(8) கரணைகள் அடுக்கப்படுவதற்கு முன்பாக, பாரில் ஆழமாகக் கொத்தி விட்டிருக்கவேண்டும்.

(9) இப்போது அடுக்கப்பட்டக் கரணைகளின்மேல், காமா பி.எச் சி. (Gama B.H.C.) என்ற மருந்தைத் தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும். 1 அவுன்சு மருந்துக்கு 3 காலன் தண்ணீர் வீதம் கலக்கவேண்டும். பூவாளி (Rose can) மூலம் தெளித்தல் மிக நல்லது. இதனால் இளங்குருத்துப் பூச்சி கட்டுப்படுத்தப்படுகிறது.

(10) சுமார் 10 பார்களுக்கு 1 பார் வீதம் இரட்டை வரிசையில் கரணை நடவேண்டும்.

கரும்பு நட்டு சுமார் 30 முதல் 40 நாட்களுக்குள் இரட்டைவரிசைப் பயிர்களில் இருந்து கரணைகள் முளைக்காத இடங்களில் பயிர்களை வேருடன் எடுத்து, நுனிப் பாகத்தை சிறிது நறுக்கி, நட்டு, உடனடியாக நீர்ப்பாய்ச்சவேண்டும். நடும்போது போதுமான ஈரம் இருக்கவேண்டும்.

எண்டிரின் மருந்து

கரணைகள் நட்டுச் சுமார் 25, 30 நாட்களில் (Endrin) 0.1 % என்ற மருந்தை 16 அவுன்சு போட்டு 50 காலன் தண்ணீரில் கலந்து 'ஸ்ப்ரேயர்' என்ற கருவிமூலம் தெளித்தல் வேண்டும். இந்த அளவு 1 ஏக்கருக்குப் போதுமானது. இதன் பயனாக நுனிக்குருத்துப் புழு தடுக்கப்படுகிறது.

களையும் உரமும்

கரும்பு நட்டுச் சுமார் 20-லிருந்து 30 நாட்களுக்குள் ளாக ஒரு கைக் களை எடுத்தல் வேண்டும். 40-ஆம் நாள் ஒரு மண்வெட்டிக் களையும், 80-ஆம் நாள் ஒரு களைக் கொத்துக் களையும் கொடுக்கவேண்டும். மண் வெட்டிகளை எடுக்கும்போது மேடுபள்ளங்களைச் சரிபார்த்தல் மிக அவசிய மாகும். மேடு பள்ளங்களைச் சரிசெய்ய இதுதான் தக்க

"ஜூனியர் ஹோ" என்ற கருவியைக் கொண்டு களை எடுத்தல்.

சமயமாகும். இரண்டாவது உரம் இடுமுன் அதாவது கரும்பு நட்டு 2 அல்லது 3 மாதங்களுக்குப்பின் 'ஜூனியர் ஹோ' என்ற கருவியைக் களையெடுக்க உபயோகிக்க லாம்.

உரமிடும் முறையில் அளவு விகிதம் மாவட்டங்கட்கு ஏற்ப மாறுகின்றது, வெவ்வேறு மாவட்டங்களுக்குத் தேவை யான 'தழைச்சத்து' விபரம் பின்வருமாறு :—

ஜில்லாக்களின் பெயர்.	ஒரு ஏக்கருக்கு தழைச் சத்து (நைட்ரஜன) இடும் அளவு.
1. தென்னாற்காடு ஜில்லா	250 பவுண்டு நைட்ரஜன்.
2. வடஆற்காடு ஜில்லா	200 ,, ,,
3. தஞ்சை ஜில்லா	150 ,, ,,
4. மதுரை ஜில்லா	150 ,, ,,

குறிப்பு.—அந்தந்த ஜில்லாக்களின் மண் வளத்திற்குத் தகுந்தாற்போல் நைட்ராஜன் சத்து கூடும், குறையும். அதிக பட்சம் 250 பவுண்டு நைட்ராஜன்தான்.

இத்தகைய தழைச்சத்தை அமோனியம் சல்பேட், மணிலாப் பிண்ணாக்கு என்ற இரு உரங்களாக கலந்து அளிக்கவேண்டும். தென்னாற்காடு மாவட்டத்தில், மணிலாப் பிண்ணாக்கு 1 பங்கும், அமோனியம் சல்பேட் 2 பங்கும் (1:2 என்ற விகிதம்) கலந்து இடப்படுகிறது. அமோனியம் சல்பேட்டில் உள்ள 'தழைச்சத்து' 21 சதவிகிதமாகும். மணிலாப் பிண்ணாக்கில் உள்ள தழைச்சத்து 7 சதவிகித மாகும்.

உரத்தை இரு காலங்களில் பிரித்து அளிக்க வேண்டும். முதன் முறையாக இடப்படவேண்டிய உரம், கரும்பு நட்டு 45-ம் நாளன்றும் இரண்டாம் முறையாக இடப்படவேண்டிய உரம் 90-ம் நாளன்றும் இடப்படவேண் டும். ஆக மொத்தம் 1 ஏக்கருக்குத் தேவையான உரம் (தென்னாற்காடு மாவட்டம், 250 பவுண்டு தழைச்சத்து) மணிலாப் பிண்ணாக்கு 1,200 பவுண்டும், அமோனியம் சல்பேட்டு 800 பவுண்டும் போதுமானது.

மணிலாப் பிண்ணாக்கை நன்கு மாவாக்கி, அத்துடன் அமோனியம் சல்பேட்டை நன்கு கலந்து, கரும்புத் தோகை களின்மீது படாது, பயிரின் வேரின் பாகத்தில் இடவேண் டும். முதன்முறை உரம் வைத்த பிறகு, மண்வெட்டி யால் இலேசாகப் பயிரின் வேர்பாகத்தில் மண்ணால் உரம் மூடப்படவேண்டும். இரண்டாம் முறை உரம் வைத்த வுடன் பட்டை தட்டிவிடவேண்டும். அதாவது கரும்பின் வேர்பாகத்தில் பாதி மண் அணைக்கவேண்டும். குறிப்பிட்ட அளவிற்கு மீறிய உரம் இடின் விரைவில் வளர்ந்து கீழே சாய ஏதுவாகும். தரம் குறையும். கரும்பு காயும். எனவே அதிக உரம் வைப்பது, அதிக செலவே தவிர, லாபம் இல்லை.

ஈரப்பாதுகாப்பும், களைதடுப்பும்

கோடைக்காலங்களில் தண்ணீர் பாசனக் கஷ்டத்தைச் சமாளிக்க ஒரு எளிய முறை உண்டு. இம்முறையில் ஈரம் பாதுகாக்கப்படுவதுடன், களைகளின் கொட்டமும் அடங்கு கிறது. அம்முறை யாதெனில், முதல் உரம் வைத்தவுடன் ஒரு காலுக்கும், மற்றொரு காலுக்கும் இடையிலுள்ள மேட்டு பாகத்தில், கரும்புத் தோகைகளை 2 அங்குலம் அல்லது 3 அங்குலம் கன அளவிற்குப் பரப்பிவிடவேண்டும். காற்றி னாலும் மற்றக் காரணங்களினாலும் அவை சரியாமல் இருக்க சிற்சிலவிடங்களில் சிறிது மண் அணைக்கவேண்டும். இரண்டாம் முறை உரம் வைத்தபிறகு இத்தோகைகளை

ஆகற்றிவிட்டு, மண் அணைக்க வேண்டும். இம்முறையினால் கோடையில் 7 முதல் 8 தண்ணீர் மீதியாகும். செலவும் குறையும். 1 எக்கருக்கு 4 டன் சோகை போதுமானது.

சோலை உரிப்பும், மண் அணைப்பும், விட்டம் கட்டுதலும்

கரும்பு நட்டு 5 அல்லது 6 மாதங்களுக்குள் முதன் முறையாகச் சோலை உரிக்கப்படவேண்டும். இவ்வாறு உரிக்கப்பட்டவுடன் நன்கு மண் அணைத்துவி வேண்டும். 7 அல்லது 8 மாதங்களில் இரண்டாவது சோலை உரித்து இரண்டு கால்களில் உள்ள கரும்பின் நுனிப்பாகத்தைப்

"விட்டம் கட்டுதல்" (Propping).

பின்னி விட்டம் கட்டிவிடவேண்டும். மண் அணைக்கும் போது கரும்புப் புதைகட்கு இடையே இடைவெளி இல்லாமல் மண்போட்டு அணைக்கவேண்டும். மண் அணைத்தலும், விட்டம் கட்டுதலும், கரும்பு விரைவில் கீழே விழுவதைத் தடுக்க ஏதுவாகும்.

நீர்ப்பாசனம்

கரும்பு நட்டதும், மணற்பூமியாக இருந்தால் ஐந்து நாட்கள் கழித்தும், களிமண் பாங்காக இருப்பின் எழு நாட்கள் கழித்தும் 'உயிர்த் தண்ணீர்' (Life Iirrigation) பாய்ச்ச வேண்டும். இச் சமயத்தில் மிகக் குறைவாகத் தண்ணீர் பாய்ச்சவேண்டும். பிறகு தொடர்ந்து 5 அல்லது 6 மாதம் வரைக்கும், 5 நாட்களுக்கு ஒரு முறையும், அதன் பிறகு 7 அல்லது 8 நாட்களுக்கு ஒரு முறையும், தண்ணீர் பாய்ச்சலாம். நாம் பாய்ச்சும் தண்ணீரின் அளவைப் பொறுத்துத்தான் கரும்பின் வளர்ச்சி இருக்கும். மேற்குறித்த அளவுமுறை மழையைப் பொறுத்துக் கூடலாம் அல்லது குறையலாம். முக்கியக் கவனிப்பு யாதெனில், கோடையில் மாத்திரம் தண்ணீர் தட்டின்றி நன்கு பாய்ச்ச வேண்டும்.

அறுவடை

கரும்பு அறுவடை செய்வதற்குச் சுமார் 10 நாட்கள் அல்லது 15 நாட்கள் முன்னதாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். கரும்பை வெட்டும்போது, தரையோடு தரையாக வெட்டவேண்டும். அதிகபாகம் கரும்பை வீணாக விடக்கூடாது. ஏனெனில் முதிர்ச்சி அடைந்த சர்க்கரைச் சத்துக்கள் கரும்பின் அடிப்பாகத்தில்தான் உள்ளன. ஒரு கரும்பைச் சுமார் 3 துண்டுகளாககவேண்டும். அதிக அளவில், அதாவது 3-க்கு மேற்பட்டுத் துண்டுகளாக்கினால், கரும்பு சீக்கிரம் காய ஏதுவாகும். இதனால் நிறை குறையும், பணம் குறையும். மேலும் வெட்டிய கரும்பை அன்றைக்கே ஆலைக்கு அனுப்பிவிடவேண்டும். இல்லையேல் கரும்பு காயத்தொடங்கும். தற்செயலாக, வெட்டப்பட்டக் கரும்பு வயலில் தங்கவேண்டி இருப்பின், நன்கு கரும்புத் தோகைகளால் மூடி, தண்ணீர் தெளித்துவிட வேண்டும்.

முடிவுரை

'சிறுகக்கட்டிப் பெருகவாழ்' என்பதுபோல, "குறைந்த செலவு, நிறைந்த விளைவு" என்ற முறையில் கரும்புச் சாகுபடி செய்ய இதுகாறும் கூறி வந்த எளிய முறையைக் கடைப்பிடித்து, தமிழக வேளாண்மைப் பெருங்குடியினர் விளைவு அதிகம் எய்தி, மனமகிழ்வு அடைந்து, நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையில் உதவிபுரிவார்களாக.

கரும்பு பயிரிடுவோம்! நிரம்ப இலாபம் அடைவோம்!

உயர்தர பலவிதச் சிறந்த ஜாதி

காய்கறி விதைகள்

இதர புஷ்பத் தோட்ட விதைகள்
திடமான நம்பிக்கை வாய்ந்த உண்மை ஜாதி

ஒட்டு மாஞ்செடிகள்

எலுமிச்சை, சாத்துக்குடி முதலிய

பலவிதப் பழச் செடிகள்

அலங்கார, வாசனை புஷ்பச் செடிகள்
பூச்சிநோய் மருந்துகள்
கலப்பு உரங்கள்
உபகரணங்கள்

கிடைக்குமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

2, டாக்டர் சிங்காரவேலு தெரு
தியாகராயநகர் சென்னை-17

தந்தி : RAJSEED. — போன் : 42262.

நிலக்கடலைக்கு முதற்பராமரிப்பு

[Pre-Treatment of Groundnut Seeds]

[எஸ். ஜி. அய்யாதுரை, ல. வீரண்ணா, எஸ். சுப்ரமணியன், எண்ணெய் வித்துப் பிரிவு]

நிலக்கடலைக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை நாம் பல முறையில் கொடுக்கலாம். சிலர் இவ் வுணவுச் சத்துக்களை நிலக்கடலை நடு முன்பு நிலத்திலேயே போடுகிறார்கள்; சிலர் நட்ட பின்பு போடுகிறார்கள். சிலர் உணவுச் சத்துக்களை நீரில் கரைத்து, வளர்ந்த செடியின் மேலும் தெளிக்கிறார்கள்.

இவ்வெல்லா முறைகளையும்விட, இங்கு கூறப்படும் புது முறையானது, நிலக்கடலைக்கு நல்ல உணவும், விவசாயிக்கு நல்ல மகசூலும் கிடைக்க எதுவாகிறது. இவ் வுணவுச் சத்துக்கள், நிலக்கடலை முளை தள்ளுவதற்கும், இளமை பருவத்தில் நல்ல வளர்ச்சியுடனும், செழுமையுடனும் இருக்க இம் முறை மிகவும் பயன்படுகிறது. இளமை பருவத்தில் நன்றாக நிலக் டலைச் செடிகள் வளர்ந்தால் தான் அவைகளை வியாதியோ, பூச்சியோ அணுகாது. இதனால் நிலத்தில் இருக்கும் உணவுச் சத்தை நன்றாக உறிஞ்சி, அறுவடையில் அதிக லாபத்தைக் கொடுக்கிறது. முதற் பராமரிப்புக்கு பின்பு நாம் சாதாரணமாக, நிலக்கடலைக்கு உணவுச் சத்துக்களை நட்ட பின்போ, நடு முன்போ போடலாம். இம் முறையானது நடப்படும் விதைகளுக்கும் உணவு கிடைக்க உதவுகிறது. இதனால் கிடைக்கும் மகசூலானது, சாதாரணமாக நாம் உரமிட்டு மகசூல் அடைவதைவிட 15·3 சதவீதம் அதிக மகசூல் கிடைக்கிறது என ஆராய்ச்சியால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

முதற் பராமரிப்பு என்றால் என்ன ?

நிலக்கடலைக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை முதலில் நீரில் கரைத்துக் கொள்ளவேண்டும். அப்படி கரைக்கப் பட்ட கரைசல் 0·5 சதவீதம் முதல் 1 சதவீதமாக இருத்தல் வேண்டும். பின் நிலக்கடலை விதைகளை நடுமுன், அந்த கரைசலில் சுமார் 16 மணி நேரம் நன்றாக ஊற வைக்க வேண்டும். அவ்வாறு ஊற வைக்குமுன், நிலக்கடலையின் விதைகள் மூன்று பாகமாகவும், கரைசல் ஒரு பாகமாகவும் (3:1) இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த கரைசலில் உள்ள உணவுச் சத்துக்கள் யாவையும் நிலக்கடலையால் உறிஞ்சிக்கொள்ள முடியும். கரைசல் அதிகமாக இருந்தால், நிலக்கடலை விதையில் உள்ள முக்கியமான உணவுப் பொருள்கள் கரைக்கப்பட்டு, வளரும் செடிக்கு அவ்வுணவுப் பொருள்கள் கிடைக்காமல் வீணாகி விடுகிறது. இவ்வாறு நிலக்கடலைக்கு நேரடியாக உணவுச் சத்துக்களை கொடுப்பதனால், விதைகள் நன்றாகவும் விரைவாகவும் முளைகளை தள்ளுகிறது. அதோடு விதைத்த எல்லா விதைகளும் உடனே முளைத்துவிடுகிறது. முளைத்த பின் அவைகள் செழுமையாக வளர்ந்து நல்ல பலனையும் கொடுக்கிறது.

முதற் பராமரிப்புக்கு வேண்டிய முக்கியமான உணவுச் சத்துக்கள் நான்கு. இருந்தபோதிலும், முதலிரண்டு உணவுச் சத்துக்களே மிகவும் முக்கியமானதாகவும், நல்ல பலனை கொடுக்கக்கூடியதாகவும் உள்ளன. ஆகையால் விவசாயிகள் முதலிரண்டு உணவுச்சத்துக்களில் எதாவது ஒன்றை நிலக்கடலைக்கு உபயோகிக்கலாம். முதலிரண்டு உப்புக்கள் சீக்கிரமாக தண்ணீரில் கரையக்கூடியவைகள். அவைகள் முறையே:—1. பொட்டாசீயம்-மானோ-பாஸ்பேட் (Potassium Phosphate Monobasic), 2. பொட்டாசீயம்-டை-பாஸ்பேட் (Potassium Phosphate-Dibasic), 3. பொட்டாசீயம்-டிரை-பாஸ்பேட் (Potassium Phosphate-tribasic), 4. சுண்ணம்பு உப்புக்கள் (Salts of Calcium) முதலியன. இவ்வுணவுச் சத்துக்கள் எல்லா இடங்களிலும், சுலபமாகவும் குறைந்த விலையிலும் கிடைக்கிறது. 0·5 சதவீத கரைசல் உபயோகித்தால் ஒரு ஏக்கருக்கு 50 கிராம் உப்பை சுமார் 10 கிலோ கிராம் தண்ணீரில் போட வேண்டும். 1 சதவீதம் கரைசல் உபயோகித்தால் ஒரு

முதற் பராமரிப்பு பெறாத செடி—முதற் பராமரிப்பு பெற்றச் செடி.

ஏக்கருக்கு 100 கிராம் உப்பை சுமார் 10 கிலோ கிராம் தண்ணீரில போடவேண்டும். இதனால் 8 அணா முதல் 1 ரூபாய் வரை செலவாகிறது.

இவ்வுணவுச் சத்துக்களை மேலே கூறப்பட்ட முறைப்படி போட்டதில் பல நன்மைகள் கிடைத்துள்ளன. அவைகள்

(17-ம் பக்கம் பார்க்கவும்)

கிலோ கணக்கில் வாங்குங்கள்

நாடு முழுதும் தற்போது கிலோகிராம், கிராம் என்ற மெட்ரிக் நிறுத்தலளவைகள் கட்டாய அமுலில் உள்ளன. வீசை, சேர், பலம் என்ற பழைய எடைகளை உபயோகிப்பது சட்ட விரோதமாகும்.

பொருள்களின் விலைகள் மாற்றுப்பட்டியல் (வீசையிலிருந்து கிலோகிராமுக்கு)

வீசைக்கு நயா பைசாவிலிருந்து கிலோகிராமுக்கு நயாபைசா

ந.பை வீசை	ந.பை கிலோ	ந.பை வீசை	ந.பை கிலோ	ந.பை வீசை	ந.பை கிலோ	ந.பை வீசை	ந.பை கிலோ	ந.பை வீசை	ந.பை கிலோ
1	1	21	15	41	29	61	44	81	58
2	1	22	16	42	30	62	44	82	59
3	2	23	16	43	31	63	45	83	59
4	3	24	17	44	31	64	46	84	60
5	4	25	18	45	32	65	46	85	61
6	4	26	19	46	33	66	47	86	61
7	5	27	19	47	34	67	48	87	62
8	6	28	20	48	34	68	49	88	63
9	6	29	21	49	35	69	49	89	64
10	7	30	21	50	36	70	50	90	64
11	8	31	22	51	36	71	51	91	65
12	9	32	23	52	37	72	51	92	66
13	9	33	24	53	38	73	52	93	66
14	10	34	24	54	39	74	53	94	67
15	11	35	25	55	39	75	54	95	68
16	11	36	26	56	40	76	54	96	69
17	12	37	26	57	41	77	55	97	69
18	13	38	27	58	41	78	56	98	70
19	14	39	28	59	42	79	56	99	71
20	14	40	29	60	43	80	57	100	71

வீசைக்கு ரூபாயிலிருந்து கிலோகிராமுக்கு ரூபாய்

ரூ/வீசை	ரூ/கிலோ	ரூ/வீசை	ரூ/கிலோ	ரூ/வீசை	ரூ/கிலோ	ரூ/வீசை	ரூ/கிலோ	ரூ/வீசை	ரூ/கிலோ
1	0·71	11	7·86	21	15·00	31	22·15	41	29·29
2	1·43	12	8·57	22	15·72	32	22·86	42	30·01
3	2·14	13	9·29	23	16·43	33	23·58	43	30·72
4	2·86	14	10·00	24	17·15	34	24·29	44	31·44
5	3·57	15	10·72	25	17·86	35	25·01	45	32·15
6	4·29	16	11·43	26	18·58	36	25·72	46	32·87
7	5·00	17	12·15	27	19·29	37	26·44	47	33·58
8	5·72	18	12·86	28	20·00	38	27·15	48	34·29
9	6·43	19	13·57	29	20·72	39	27·86	49	35·01
10	7·14	20	14·29	30	21·43	40	28·58	50	35·72

1 கிலோகிராம் (1000 கிராம்) = சுமார் 28 பலம்

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது D.A. 61/601

லட்சுமி பருத்தியைப் பயிரிடாதீர்!

(திரு அன்னப்பன், திரு சற்குணம், டேவிஸ் பீட்டர், உதவிப் பருத்தி நுண்ணறிஞர்கள்—கோவில்பட்டி.)

லட்சுமி என்ற அமெரிக்கப் பருத்தி ஆந்திர மாகாணத்திலிருந்து 1959-60 வருடத்தில் நம்மாகாணத்திற்கு சில வியாபாரிகளால் கொண்டு வரப்பட்டது.

* இது மானாவாரி கரிசல் நிலங்களுக்கு ஏற்றதா என்பதைக் கூட பரிசோதிக்கவில்லை.
* அதன் பஞ்சின் தரத்தையும் ஒழுங்காக நிர்ணயிக்கவில்லை.
* அதன் விதை ஒரே கலவன் நிறைந்து கீழ்த்தரமானதாகவிருக்கிறது.
* இப்பருத்தி உரமிட்ட கரிசல் நிலத்தில், நிறைய மழை பெய்த காலத்தில்தான் பலன் கொடுக்கிறது.
* மற்ற நிலங்களிலும் மழை குறைவான காலத்தில் இது நன்றாக வளருவதுகூட இல்லை.
* இத்துடன் பயிரிடப்படும் கலப்புப் பயிர்களின் மகசூல் அதிகமாக பாதிக்கப்படுகிறது.
* இதற்குப் பின் பயிரிடப்படும் மாற்றுப்பயிரான கம்பு அல்லது சோளநாத்துப் பயிரும் சரியாகப் பலன் கொடுப்பதில்லை. ஏனெனில் லட்சுமிப் பருத்தியின் வேர் மேல்பரப்பில் பரவலாகப் போவதால் நிலத்தின் தாவர சத்தை அதிகமாக உறிஞ்சி எடுத்துக்கொள்கிறது.
* இப்பருத்தியை, பிஞ்சை துளைக்கும் புழுக்களும், தத்துப்பூச்சிகளும், 'எபிட்' என்ற அசுவினிகளும் அதிகமாகத் தாக்குகின்றன. மற்றும் நொருக்கு நோய், செவ்வாளை போன்ற நோய்களும் இதனை பாதிக்கின்றன.

கருங்கண்ணி—கே 6. (பாண்டியன்) எவ்விதத்திலும் லட்சுமியைவிட மேலானது.

(1) கருங்கண்ணி கே. 6 பருத்தி பலதரப்பட்ட கரிசல், வெப்பல், பொட்டல் நிலங்களில் நல்ல பலன் கொடுக்கிறது.

(2) இத்துடன் பயிரிடப்படும் கலப்புப் பயிர்களான உளுந்து, மல்லி, தினைபோன்ற பயிர்களின் மகசூலும் பாதிக்கப்படுவதில்லை.

(3) மாற்றுப் பயிர்களான கம்பு, சோளமும் பாதிக்கப்படுவதில்லை.

(4) மேலும் உரக்கால்களிலும், உரமில்லாத நிலங்களிலும் நல்லவிளைச்சல் கொடுக்கிறது.

(5) இதனை எவ்விதப் பூச்சி, பூசண நோய்களும் பாதிப்பதில்லை.

(6) இப்புதுரகப் பருத்திக்கு எப்பொழுதும் லட்சுமிப் பருத்தியைக் காட்டிலும் அதிக விலை கிடைக்கும்.

ஆதலால்,

விவசாயிகள் ஆதாயத்திற்கே உற்பத்தி செய்யப்பட்டதும், உயர்ந்த தரமுடையதும், சுத்தமானதுமான கருங்கண்ணி கே. 6 (பாண்டியன்) பருத்தியையே நம்மாநில கரிசல் மானாவாரி நிலங்களில் விவசாயிகள் பயிரிட வேண்டும். லட்சுமியைப் பயிரிட்டு வீண் நஷ்டமடையாதீர்!

தென்னகம் எங்கும் பெரும்பாலான விவசாயிகள் பல்லாண்டுகளாக ஒருமுகமாகப் பாராட்டி

"சூரியன்" மார்க் கலப்பு உரங்களை

வாங்குவதின் காரணம்:

* சர்க்காரின் அங்கீகாரம் பெற்றிருக்கிறது.
* பயிர் உணவுகளின் சத விகித சத்துப் பொருள்கள் உத்திரவாத மளிக்கப்பட்டிருக்கிறது.
* நிலங்களின் செழுமையை நீடித்துப் பாதுகாத்து அமோக விளைச்சலைத் தருவதில் முன்னணியில் நிற்கின்றது.

Regd. No. 156902

சில்களுடன் கூடிய "சூரியன்" மார்க் கலப்பு உரங்களை கவனித்து, இந்த உரமிடுங்காலத்திலும் சகல பயிர்களுக்கும் உபயோகித்து, மகசூலைப் பெருக்குங்கள். தங்களூர் அருகிலுள்ள எமது அத்தாட்சி பெற்ற விற்பனையாளர்களிடம் கண்ட்ரோல் விலைக்கே வாங்கிப் பயனடையுங்கள்.

விவரங்களுக்கு :—

கோயமுத்தூர் கெமிகல்ஸ் & பெர்டிலைசர்ஸ் லிட்.,
457, வைசியாள் வீதி * கோயம்முத்தூர்-1.

கேரளா கிளை :—54, புதுப்பரியாரம். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் P. O., பாலக்காடு-2.

உங்கள் நெற்பயிருக்கு

போட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

*உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:*

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMa

உரமிடுதலுக்கு ஐந்து நல்விதிகள்

(திரு. சி. கே. இராஜகோபால், உதவி மண்வள நிபுணர், ஆடுதுறை.)

எல்லா வகை மண்களுக்கும், பயிர்களுக்கும் ஏற்றதான உரக் கலவைகளை நிர்ணயித்தால் நல்ல முறையிலும், சிக்கனமாகவும் உரங்களை உபயோகிக்கலாம். உரங்களின் அளவை ஸ்திரப்படுத்துதல் மிகவும் கடினமே; இருந்தாலும் மண் வளத்திற்கும், மண் பராமரிப்பிற்கும், பெருமளவிற்கு ஏற்றதான ஒரு சில விதிகளை ஏற்படுத்தலாம்.

விதி :—1

நல்ல பராமரிப்பு முறைகளினால் பயிர்களின் தரத்தையும் மகசூலையும் அதிகப்படுத்தலாம்.

நல்ல தரமுள்ள உரங்களைப் போடுதல், பயிர்களுக்கு நடுவே இடைவெளி விட்டுப் பயிரிடுதல், மண் சீர்திருத்தங்கள், நீர்ப்பாசனம், பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்துதல் போன்ற பண்புள்ள முறைகளினால் உற்பத்தியைப் பெருக்க முடியாத நிலங்கள் மிக மிகக் குறைவே.

சீர்திருத்தப்பட்ட பராமரிப்பு முறைகளினால் நல்ல பயிர் வளர்ச்சிக்கு நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. நமது நாட்டில், பயிர்களின் உற்பத்தித் திறனில், 20 சதவீதத்தைக்கூட நம்மால் அடைய முடியவில்லை.

விதி :—2

பயிர்களின் சத்துப்பொருள் பற்றுக்குறை எப்பொழுதும் தெளிவாகத் தெரியாது. அவைகள் இதர காரணங்களினால் மறைக்கப்பட்டோ அல்லது தூண்டப்பட்டோ இருக்கும்.

சில சமயங்களில் எல்லாப் பயிர்களும் சத்துப் பொருள்கள் பற்றுக்குறை உடையவை என்பதை ஒரு விதியாகவே கொள்ளலாம். இன்னும் சில சமயங்களில் அவைகள் பல சத்துப்பொருள்கள் பற்றுக்குறை உடையனவாகவும் இருக்கலாம். அச்சமயங்களில் அதிகப் பற்றுக்குறை உடைய சத்துப் பொருளானது குறைவான பற்றுக்குறை உடைய சத்துப் பொருளை மறைத்துவிடும். தாவர சத்துப் பொருள்களின் செயல்கள் யாவும் ஒன்றையொன்று சார்ந்து இருக்கும். எந்தச் சத்துப் பொருளும் தனியாகச் செயல்பட முடியாது.

உதாரணமாக மண்ணில் அதிகமாக உள்ள சுண்ணம்பு மண்ணிலுள்ள சாம்பல் சத்தினை உறிஞ்சக் கூடிய சக்திக்கு எதிரிடையான பலனைத் தரலாம். மண்ணில் உள்ள அதிகப்படியான மணிச் சத்தானது இரும்புச் சத்துப் பற்றுக் குறையை அதிகப்படுத்தலாம். நைட்ரேட்டுகளினின்றும் கிடைக்கும் தழைச் சத்துக்குப்பதிலாக அமோனியா மூலம் கிடைக்கும் தழைச் சத்தினைப் போடுவதால், அது மண்ணிலுள்ள மணிச் சத்தினைப் பயிர்கள் அதிகமாக உறிஞ்ச தூண்டுகோலாக அமையலாம்.

பலவகைச் சத்துப் பொருள்களின் பற்றுக் குறைகளினாலும், அவைகளுக்கு உள்ள உள்ளுறவுகளினாலும், ஒரு குறிப்பிட்ட சத்துப்பொருள் எதிர்பார்த்த பலனை அளிக்காவிட்டால், அந்த சத்துப் பொருளின் அவசியம் இல்லை என்று உறிதியாகக் கூற முடியாது. எதிரிடையான பலன்கள் பற்றியும், ஒருவரும் உறுதியாகக் கூற முடியாது

பல மூந்திய பரிசோதனைகளில் முக்கியமான பயிர்ச் சத்துப் பொருள்கள் எதிர்பார்த்த பலனை அளிக்க வில்லை. உதாரணமாக, மண்ணில் உள்ள குறைந்த ஈரம் முக்கிய காரணகர்த்தாவாக (Limiting Factor) இருந்து தழைச்சத்து உரமிடுதலுக்கு மிகவும் ஆதர்வாக இருக்கலாம். ஆனால் இதைக்கொண்டு மண்ணில் தழைச் சத்து அதிகமாக உள்ளது என்று தீர்மானிக்கக்கூடாது.

விதி :—3

மண்ணிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு தாவர சத்துக்களே பயிருக்குக் கிடைக்கின்றன. பயிர்ச் சத்துக்களை அளிக்கும் மண்ணின் திறனுக்கும் ஒரு வரையறையுண்டு.

ஒரு காலத்தில் பயிரிடுவதற்கு அருமையான நிலம் என்று கருதப்பட்ட நிலங்கள் எல்லாம் இப்போது, வேண்டிய சத்து இன்றி உள்ளன. மேலும் தீவிர சாகுபடி செய்வதன்மூலம் பயிர்ச் சத்துக்கள் எல்லாம் வெகுவாக குறைந்து விடுகின்றன. அந்நிலங்களை மீண்டும் வளம் பெறச் செய்வதற்கு, குறைந்துள்ள சத்துப் பொருள்களை உரமிடுதல் மூலம் ஈடுசெய்ய வேண்டும்.

விதி :—4

எல்லாவகை மண்ணுக்கும் பயிர்களுக்கும் தழைச் சத்து உரங்கள் மிகவும் அவசியம்.

தழைச்சத்து (Nitrogen) பொதுவாக மண்களிலும் குறைவாகவே உள்ளது. உரமிடாது தொடர்ந்து சாகுபடி செய்வதால் மண்ணில் தழைச் சத்தின் அளவு மிகவும் குறைந்துவிடுகிறது. மேலும் உஷ்ணப் பிரதேசத்தில் அச் சத்து விரைவில் அழிவடைகிறது. ஆதலால் அவ்வப்போது தழைச்சத்து உரங்களிட்டு ஈடுசெய்தல் மிக அவசியம்.

விதி :—5

நல்ல பராமரிப்பு முறைகளினால் மண்ணினின்றும் பயிர்களுக்குக் கிடைக்கவேண்டிய சத்துப்பொருள்களின் திறனை அதிகரிக்க முடியும்.

களர், அமிலம், உப்பு நிறைந்துள்ள நிலங்களைச் சீர்திருத்துதல், களிமண் நிலங்களையும், மணற்பாங்கான நிலங்களையும் சீர்திருத்த தாவரச் சத்துக்களைப் போடுதல், உரங்களை சமமான அளவில் சிறிது சிறிதாகப் போடுதல், தீவிரமாக சாகுபடி செய்யும் நிலங்களில் நுண்ணிய மூலகங்கள் (Trace Elements) போடுதல், பொருக்கு விதைகள் உபயோகித்தல், நல்ல நீர்ப்பாசனம் ஆகியவைகள் நாம் நிலத்திற்கு இடும் உரங்களில் உள்ள சத்துக்களைப் பயிர்கள் நன்றாக உபயோகித்துக்கொள்ளும் தன்மையை அதிகரிக்கின்றது.

நெடுங்காலக் காய்கறிகள்

(சி. கெ. ராஜகோபாலன். சிறு தானியப் பண்ணை, கோயமுத்தூர்.)

காய்கறிகளின் விலைவாசி உயர்ந்துபோகும் இக் காலத்தில் எல்லோரும் முயற்சி எடுத்துத் தங்கள் வீட்டின் சுற்றுப்புறங்களில் அதிக காலம் பலன் அளிக்கக்கூடிய சிலவற்றைத் தேர்ந்தெடுத்து பயிராக்குவது சுலபம். இவைகள் ஒரு முறை நட்டால் அதிக காலம் அதிக கவனிப்பின்றி பலன் அளிக்கக்கூடியது.

இவ்வகை காய்கறி வகைகளில் சிலவற்றின் விவரம் கீழ்வருமாறு.—

முருங்கை.

அதிக சிரமமில்லாமல் இதை சாகுபடி செய்யலாம். இதன் இலைகளும் காய்களும் சமையலுக்கு சிறந்தது. இதை நறுக்கு துண்டுகளிலிருந்தும் விதைகளிலிருந்தும் உற்பத்தி செய்யலாம். பதினைந்து அடி சமவெளியில் எருப்போட்டு தயார் செய்யப்பட்ட குழிகளில் நடவேண்டும். விதைகள் நட்டு இரண்டு மாதங்களில் நாற்றுக்கள் சுமார் ஓரடிக்கு வளர்ந்துவிடும். அப்போது இதைப் பறித்து நடவேண்டும். செடி நான்கு மாத வளர்ச்சி அடைந்த பின் அதன் நுனியைக் கிள்ளிவிடவேண்டும். இதனால் செடி தழைத்து வளருகிறது. சுமார் நான்கு வருடத்தில் இது காய்க்க ஆரம்பிக்கும். குச்சிப்பதியங்களை நடுவது மிகவும் சுலபம், மூன்றடி நீளமும், இரண்டு அங்குலம் பருமனும் உள்ள துண்டுகளை நடவேண்டும். இவைகள் இரண்டாவது வருடத்திலேயே காய்க்க ஆரம்பிக்கும்.

முருங்கையில் இரண்டு ரகங்கள் உண்டு. இவைகள் சிறிய காய்களை அளிக்கும் நாட்டு ரகமும் பெரிய காய்கள் அளிக்கும் "ஜாஃப்னு" ரகமும்தான். இதில் சிறந்தது "ஜாஃப்னு" ரகம் ஆகும்.

வயதான மரத்தை மூன்றடி நீளம் வைத்து வெட்டி விட்டால் மரம் மீண்டும் நன்றாக துளிர் விட்டு காய்க்கத் துடங்கும்.

சீமைப் பலா.

இது 40' முதல் 60' வரையில் வளரும் ஒரு மரமாகும். இதில் விதை இருக்கும் ரகமும், விதை இல்லாத ரகமும் உண்டு. விதை இல்லாத ரகம் தான் உகந்தது. பெரிய மரங்களின் வேர்களிலிருந்து முளைத்து வரும் செடிகளை வெட்டி எடுத்து நடவேண்டும். நட்டபிறகு சுமார் 8 வருடத்தில் காய்கள் பறிக்கலாம.

பச்சை நிறத்தில் உருண்டை வடிவம் கொண்ட இதன் காய்கள் சமையலுக்கு சிறந்தது.

கொடிப் பசலை.

இது சுலபமாக சாகுபடி செய்யக்கூடிய ஒரு கீரையாகும். இதை ஒரு முறை நட்டால் அதிக காலம் பலன் அளிக்கும். நிலத்திலோ மண் தொட்டிகளிலோ பயிராக்கலாம். குச்சிப் பதியன்களிலிருந்தும் விதைகளிலிருந்தும் இதை உற்பத்தி செய்யலாம் பதியன்கள் நடுவதானல் நன்றாக முற்றின முக்கால் அடி நீளத்துண்டுகளை நடவேண்டும். இதை குறைந்தது 3' சமவெளியில் நட்டு வளருவதற்கு ஏதாவது தாங்குக்கோல் நடவேண்டும்.

சிவப்பு நிறம் கொண்டதும் பச்சை நிறம் கொண்டதும் ஆக இதில் இரண்டு ரகங்கள் உண்டு. நட்டு மூன்று மாதத்தில் இளம் இலைகளும் தளிர்த் துண்டுகளும் சமையலுக்கு பறிக்க ஆரம்பிக்கலாம்.

மலந்துவரை.

இது சாதாரண துவரை போல் அல்லாமல் சிறு மரமாக வளர்ந்து நான்கு முதல் ஐந்து வருடம் வரையில் காய்கள் தரும். காய்கள் முக்கால் பங்கு முற்றினல் பறித்து கொட்டைகளை பட்டாணி போல் உபயோகிக்கலாம். இதை பருப்பு செய்வதற்கு உபயோகப்படுத்துவதில்லை.

பருவமழை கிடைத்ததும் ஆனி—ஆடி மாதங்களில் இரண்டடி ஆழமும் ஓரடி அகலமும் உள்ள குழிகள் வெட்டி எருப்போட்டு தயார் செய்து குழிக்கு ஒரு விதை வீதம் நடவேண்டும். முதல் காய்களை தை மாதத்தில் பறிக்கலாம்.

பிலிம்பி (புலிச்சக்கை).

இது விதையிலிருந்து தான் உற்பத்தி செய்யப்படுகிறது. முற்றின பழங்களிலிருந்து விதை எடுத்து நாற்று போடவேண்டும். ஆறு மாதத்திற்குள் நாற்று சுமார் ½ அடி வளரும். அப்போது இதை எருப்போட்டு தயார் செய்யப் பட்ட குழிகளில் பறித்து நடவேண்டும். ஐந்து வருடத்தில் செடி காய்க்கத் துவங்கும். சித்திரை மாதத்திலும் ஐப்பசி மாதத்திலும் காய்கள் கிடைக்கும். காய்கள் பாதி முற்றினல் பறித்து கறிக்கு உபயோகப்படுத்தலாம். ஊறுகாய் தயார் செய்வதற்கு இது சிறந்தது.

யாவரும் விரும்பும் இவ்வகை காய்கறிகளை நாமே வீட்டில் பயிரிடுவதால் பணம் மிச்சமாவதுடன் காய்கறிகளை புதியனவாகவும் உபயோகிக்கமுடியும்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

1. பூக்கும் திறன்.—நிலக்கடலையின் பூக்கும் திறன் சுமார் 19·2 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதிகமாக பூக்கள் பூப்பதால் அதிக பலனை நாம் காணமுடியும். 2. செடியின் வளர்ச்சி.—இம் முறையால் நிலக்கடலையின் செடிகள் செழுமையாகவும், பசுமையாகவும், அதிக இலைகளுடனும் காணப்படுகின்றன. இதனல் செடியின் உணவு உறிஞ்சும் திறன் அதிகமாகி, உறிஞ்சப்பட்ட உணவுச்சத்துக்களை செடியின் பல பாகங்களுக்கும் கொடுத்துவிட்டு, மீதமுள்ளதை நிலக்கடலையாக சேமித்து வைக்கப்படுகிறது. இதனல் செடியின் உயரம் 31·1 சத வீதம் அதிகமாகியுள்ளது. 3. விளைவு.—நிலக்கடலையின் மகசூல் சாதாரணமாக நாம் பெறும் மகசூலைவிட சுமார் 15·3 சத வீதம் அதிகரித்துள்ளது.

மேலே கூறப்பட்ட முறையை ஒவ்வொரு விவசாயியும் கையாள முயற்சி செய்து பாருங்கள். அதனல் நீங்கள் நல்ல லாபத்தைப் பெறுவீர்கள் என்பதில் சந்தேகமில்லை. இதனல் விவசாயிகளுக்கு ஒருவிதமான கஷ்டமும் கிடையாது. ஏனெனில் மேலே கூறப்பட்ட உணவுச் சத்துக்கள் எங்கும் கிடைக்கின்றன. இதற்கு ஒரு செலவும் கிடையாது. குடும்பத்திலுள்ள நபர்களே இக் கரைசலைத் தயாரிக்கவும், ஊறவைக்கவும் முடியும். ஆகையால் கூலியாட்கள் இதற்காகத் தேவைப்படாது. இம்முறையைக் கையாண்டு, நமது விவசாயிகள் நல்ல பலனை நிலக்கடலையிலிருந்து பெறுவார்கள் என நம்புகிறோம்.

1962-ம் வருடம் நவம்பர் மாதம் விவசாய இலாகா பண்ணைகளில் கிடைக்கும் விதைகளும், செடிகளும்

வரிசை எண். (1)	விதைகள், செடிகள் பற்றிய விபரம். (2)	கிடைக்கும் அளவு (3)	விலை (ஒவ்வொன்றுக்கு) (4)
	அ. தோட்டக்கலை உதவியாளர், மாதிரி தோட்டம், நாற்றங்கால், குற்றாலம்.		ரூ. ந.பை.
1.	பலா நாற்றுகள்	500	0 50
2.	எலுமிச்சை நாற்றுகள்	100	1 00
3.	சாத்துகுடி நாற்றுகள்	200	0 50
4.	பம்ளிமாசு நாற்றுகள்	100	0 50
5.	மாதுளை குச்சிப் பதியம்	20	0 50
6.	பச்ச திராக்ஷை	20	0 50
7.	கமுகு நாற்றுகள்	4,000	0 13
8.	ஜாதிக்காய் கன்றுகள்	500	1 00
9.	ரோஜா குச்சிப் பதியம்	50	0 50
10.	குரோட்டன்ஸ் செடிகள்	400	1 00
11.	கல்வாழை (6 நிறங்கள்)	200	0 12
12.	வெண்டை விதை	6 கிலோ	16 00 கிலோவுக்கு
13.	கோ. 1 பப்பாளி விதைகள்	2 கிலோ	20 00 கிலோவுக்கு
	ஆ. தோட்டக்கலை உதவியாளர், காய்கறி விதை உற்பத்தி சென்டர், பெரியகுழம்.		
1.	தக்காளி விதை	எச். 204	2 கிலோ
2.	தக்காளி விதை	எச். 123	1 கிலோ
3.	தக்காளி விதை	(ஸ்டுபிஸ்)	0·5 கிலோ
4	புடலங்காய்	எச். 375	2 கிலோ
5.	பாகல்	எச். 279	4 கிலோ
6.	கொத்தவரைக்காய்	சி. பி.78	5 கிலோ
7.	கத்தரிக்காய்	எச். 129	0·5 கிலோ
	இ. பழ உதவியாளர், மாதிரிப் பழத் தோட்டம், நாற்றங்கால், பெரியகுளம்.		
	ஒட்டு மாங்கன்றுகள்—		
1.	பங்களூரா	500	1 50
2.	நீலம்	1,000	1 50
3.	பனேஷான்	50	2 50
4.	கே. ஒ. 8	110	2 50
5.	ஹிமாயுதீன்	100	2 50
6.	மல்கோவா	50	2 50
	கொடி எலுமிச்சைப் பதியன்கள்.—		
1.	இத்தாலிய தினுசு	200	0 75
2.	நேபாளி, நீண்ட தினுசு	..	..
3.	செவில்லி	150	0 75
4.	எலுமிச்சை நாற்றுகள்	200	0 50
5,	சாத்துகுடி	15	1 00
	திராக்ஷை வேறூன்றிய குச்சிப்பதியன்கள்.—		
1.	பச்ச திராக்ஷை	3,000	0 38
2.	அனுப்-இ-ஷாஹி	2,000	0 38
3	விதையில்லாத திராக்ஷை வகை	2,000	0 38
4.	பங்களூர் நீல திராக்ஷை	500	0 38
5.	ஃபக்டி	10,00	0 38
	கொய்யா இதரவகை பதியன்கள்.—		ரூ. நபை.
1.	கொய்யா பதியன்கள்	10	1 00
2.	ஷை	20	0 38
3.	மாதுளை ஆர். சி.	50	0 38
4.	செக்கூர் மாணிஸ் குச்சிப் பதியன்கள்.	200	0 38
	ஈ. கண் காணிப்பாளர், விவசாய ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.		
1.	மால்டா எலுமிச்சை வேறுன்றிய குச்சிப்பதியன்கள்.	50	0 50
2.	சிங்கப்பூர் பலா நாற்றுகள்	20	0 60
3.	எலுமிச்சை நாற்றுகள்	20	0 40
	உதவியாளர் பழ ஆராய்ச்சி நிலையம், கூனூர்		
	ப்ளம் தினுகள்—		
1.	ஹேறல்	1290	1 00
2.	ரூபியோ	185	1 00
3.	அபுபக்கர்	141	1 00
4.	கேவியோட்டா	240	1 00
5.	அபண்டன்ஸ்	..	..
6.	கெல்ஸி	31	1 00
7.	அக்டோபர் பர்பிள்	14	1 00
8.	ஷென்ஞே	1,456	1 00
	பீச் தினுசுகள்—		
9.	இலவிஜிராங்க்ஸ்	21	1 00
10.	ஷாபஸந்த்	590	1 00
	பேரி தினுசுகள்—		
11.	நியூபிங்க்-ஒட்டுச் செடி	113	1 00
12.	வில்லியம் ஒட்டு	1,836	1 00
13.	கீபர் ஒட்டு	389	1 00
14.	ஜார்கொனெல்லா ஒட்டு	914	1 00
15.	எப்ரிகாட்	12	1 00
	ஆப்பிள் தினுகள்—		
16.	ரோம் ப்யூட்டி (ஒட்டு)	18	1 75
17.	இதர தினுசுகள் (ஒட்டு)	190	1 75
18.	கேரிஸ்க்டன் (ஒட்டு)	26	1 75
19.	டிலிஷியஸ் (ஒட்டு)	19	1 75
20.	எட்வர்ட் 7 (ஒட்டு)	13	1 75
21.	கொடைக்கானல்	..	1 75
22.	ஐரிஷ்பீச்	8	1 75
23·	பாலின்ப்யூட்டி	12	1 75
	(ண) உதவியாளர், கல்லாறு பரலியாறு பழ ஆராய்ச்சி நிலையங்கள், மேட்டுப்பாளையம்.		
1.	கமுகு நாற்றுகள்	2,300	0 13
2.	அவகாடோ நாற்றுகள்	6	1 50
3.	வாழை கன்றுகள்	300	0 15
4.	சீமைப்பலா நாற்றுகள்	80	0 50

வரிசை எண் (1)	விதைகள், செடிகள் பற்றிய விபரம் (2)	கிடைக்கும் அளவு (3)	விலை (ஒவ்வொன்றுக்கு) (4) ரூ.	ந.பை
5.	போகன்வில்லா—வெள்ளை தினுசு, குச்சிப் பதியன்கள்.	..	1	00
6.	போகன்வில்லா—சிவப்பு தினுசு. குச்சிப்பதியன்கள்.	50	1	00
7.	கோகோ நாற்றுகள்	1,270	0	25
8.	காரம்போலா நாற்றுகள் (இனிப்பு ரகம்).	60	0	25
9.	இலவங்க நாற்றுகள்	100	0	75
10.	ஏல நாற்றுகள்	125	0	50
11.	சீதாப் பழ நாற்றுகள்	25	0	25
12.	குரோட்டன்ஸ்—குச்சிப் பதியன்கள்.	100	0	75
13.	செக்கூர்மானிஸ்—குச்சிப் பதியன்கள்.	100	0	13
14.	ஜெயண்ட கிரானடில்லா நாற்றுகள்.	45	0	50
15.	இரோப் பழ நாற்றுகள்	100	1	00
16.	செம்பருத்தி—குச்சிப்பதியன்கள்.	225	0	50
17.	பலா நாற்றுகள்	25	0	25
18.	சிங்கப்பூர் பலா நாற்றுகள்	200	0	50
19.	லிச்சி நாற்றுகள்	70	0	50
20.	மான்டரின் ஆரஞ்சு நாற்றுகள்.	100	0	50
21.	மங்குஸ்தீன் நாற்றுகள்	100	1	00
22.	மலேயா ஆப்பிள் நாற்றுகள்	70	0	50
23.	ஜாதிக்காய் நாற்றுகள்	675	0	75
24.	ரோஸ் ஆப்பிள் நாற்றுகள்	100	0	50
25.	ரோஜா—குச்சிப் பதியம்	50	0	50
26.	லாங்சாட் நாற்றுகள்	240	0	50
27.	பம்ளிமாசு நாற்றுகள்	300	0	50
28.	வெனிலா—குச்சிப் பதியம்	175	0	50
29.	டூரியன் நாற்றுகள்	130	0	50
30.	சீமைப் பலா—குச்சிப் பதியம்	6	1	00
31.	கோலாநட் கன்றுகள்	10	0	50
32.	வெல்வெட் ஆப்பிள் நாற்றுகள்.	10	0	50
33.	மஞ்சள் பாஷன் பழச்செடி நாற்றுகள்.	10	0	50

(எ) பழ உதவியாளர் மாதிரி பழத்தோட்டம், நாற்றங்கால், திம்மாபுரம், காவேரிப்பட்டினம் போஸ்ட் ஆபீஸ்

1.	சாத்துக்குடி நாற்றுகள்	300	0	50
2.	எலுமிச்சை நாற்றுகள்	200	0	50
3.	ஹவாய் நாரத்தை நாற்றுகள்	50	0	50
4.	பம்பிளிமாஸ் நாற்றுகள்	25	0	50
5.	**கொடி எலுமிச்சை பதியன்கள்.**			
(i)	நேபாளி நீண்ட ரகம்	100	0	50
(ii)	நேபாளி உருண்டை ரகம்	50	0	50
(iii)	வில்லாஃபிராங்கா	75	0	50
6.	**கொய்யா பதியன்கள்.**			
(i)	அனகாபள்ளி	100	0	50
(ii)	சில்திதார்	100	0	50
(iii)	விதையில்லா ரகம்	100	0	50
(iv)	பங்களூரா	50	0	50

வரிசை எண் (1)	விதைகள், செடிகள் பற்றிய விபரம் (2)	கிடைக்கும் அளவு (3)	விலை (ஒவ்வொன்றுக்கு) (4) ரூ.	ந.பை.
7.	**திராக்ஷை—குச்சிப் பதியன்கள்.**			
(i)	அனுப்-இ-ஷாஹி	1000	0	38
(ii)	பச்சதிராக்ஷை	400	0	38
(iii)	பங்களூர் நீலம்	200	0	38
8.	பாஷன் பழ நாற்றுகள்	200	0	25
9.	செக்கூர்மானிஸ் — குச்சிப் பதியன்கள்.	100	0	25
10.	கமுகு நாற்றுகள்	4000	0	13
11.	ரோஜா, மல்லிகை போன்ற செடிகள்.	200	0	50

(ஏ) உதவி தோட்டக்கலை நிபுணர், பழ ஆராய்ச்சி நிலையம், கன்னியாகுமரி.

ஒட்டு மாஞ்செடிகள்.—

1.	நீலம்	356	2	00
2.	பங்களூரா	356	2	00
3.	மல்கோவா	75	2	00
4.	பாதிரி	50	2	00
5.	ருமானி	50	2	00
6.	சுரங்குடி	20	2	00
7.	நாடன்	5	2	00
8.	ரஸ்புரி	10	2	00
9.	அலிபஸந்த்	5	2	00
10.	வாசஞ்ஜதி	10	2	00
11.	தில்பசந்த்	15	2	00
12.	குதாதாத்	5	2	00
13.	கல்கண்டு	10	2	00

கொய்யா பதியன்கள்.—

14.	அலஹாபாத்	350	0	80
15.	பனாரஸ்	50	0	80

மாதுளை பதியன்கள்.

16.	தோல்கா	100	0	80
17.	பங்களூரா	100	0	80

மாதுளை குச்சிப்பதியன்கள்.

18.	தோல்கா	50	0	40
19.	பங்களூரா	70	0	40

கொடி எலுமிச்சைப் பதியன்கள்.

20	மால்டா	100	0	80
21.	நேபாளி	50	0	80
22.	எலுமிச்சை நாற்றுகள்	100	0	40
23.	பப்பாளி	100	0	40

(ஐ) உதவி தோட்டக்கலை நிபுணர், அரசாங்க பூந்தோட்டம், ஊட்டி.

1. இருதினுசு 'பாப்பி' செடி விதைகள் 5 கிலோ.
2. ஃப்ளாக்ஸ் விதைகள் .. 250 கிராம். (10 கிராங்கள்)
3. கலப்பு ஃப்ளாக்ஸ் விதை .. 300 கிராம்.
4. லூபின்ஸ் விதைகள் (5 ரகங்கள்) 18 கிலோ.

கேள்வி அரங்கம்

கேள்வி.—மாதுளம் பழம் சொத்தை (புழு) விழுவதற்கு காரணம் என்ன ? இதைப் போக்க வழி என்ன ? சென்னை ராஜ்யத்தில் எத்தனை பழச்செடி பண்ணையுள்ளது ? எது சிறந்தது என்று தெரியபபடுத்தவும்.

எ. பாலசுப்ரமணி,
தொப்பப்பட்டி.

பதில்.—மாதுளம் பூக்களிலும், காய்களிலும் "வீர சோளா" என்ற பூச்சி முட்டை இடுகிறது. இவை புழுக்களாக வளர்ந்து பழத்தைத் துளைத்து சொத்தை உண்டாக்குகிறது.

இதைத் தடுக்க பூக்களின்மேல் மடல்கள் உதிர்ந்த பிறகு இன்னம் போலுள்ள கீழ் மடலை வெட்டி விட்டு "கால்சியம் ஆர்சினேட்" (Calcium arsenate) அல்லது "லைம் சல்பர்" (Lime sulphur) மருந்தைத் தெளிக்கவும்.

காய்களை பையினால் மூடியும் பூச்சிகளைத் தடுக்கலாம்.

கேள்வி.—நான் ஒரு நிலம் புதிதாக வாங்கியிருக்கிறேன். அந்த நிலம் நல்ல களிப்பும், மணலும் சரிசமமாகக் கலந்து பார்ப்பதற்கு நல்ல மண்ணாய் இருக்கிறது. அதில் கோரை நிறைய வளர்கிறது. எவ்வளவு நன்றாக உழுதாலும் கோரை அறுவதாய் இல்லை. என்ன பயிரிட்டாலும் பயிரை நன்றாக வளரவிடாது கோரை மூடிவிடுகிறது. அதற்கு என்ன செய்யலாம் என்று அதில் சம்பந்தப்பட்டவரை கலந்தாலோசித்து வானொலி மூலம் தயவு செய்து தெரிவிப்பீர்களா ?

பலராம் நாயக்கர்,
விட்டிலாபுரம், செங்கை மாவட்டம்.

பதில்.—தற்போது மார்க்கட்டில் கிடைக்கும் பல "களைக் கொல்லி" மருந்துகளில் "டௌப்பான்" என்ற மருந்து கோரைப் புல்லை (Nut grass) ஒழிக்கும் தன்மை வாய்ந்தது. எக்கருக்கு 20 ராத்தல் மருந்து தேவை. 30 அல்லது 40 காலன் தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவேண்டும். இம் மருந்து தெளிக்கும்பொழுது அருகாமையிலுள்ள பயிர்களுக்குப் பரவாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். [குறிப்பாக இரு இதழ் விதைப் பயிர்கள் (Dicot)] மருந்து தெளிக்கும் கருவியை உபயோகித்தபின் நன்கு சுத்தம் செய்யவேண்டும். எக்கருக்குத் தேவையான மருந்தின் விலை ரூபாய் எட்டு ஆகும்.

கேள்வி.—அன்புள்ள ரேடியோ நிலைய நிர்வாகஸ்தர் அவர்களுக்கு, வணக்கம். நீங்கள் தோட்டம்பற்றி செடி வகைகளுக்கு பூச்சி மருந்து தெளிப்பது பற்றி ரேடியோவில் சொல்வதை கேட்கிறோம்.

1. கத்தரி செடியில் துளிர் வருகிறபொழுது அந்த காம்புக்குள் பூச்சி இருந்துகொண்டு அந்த துளிர்பட்டுப் போய் விடுகிறது. அதற்கு என்ன செய்யலாம்.

2. பப்பாளி செடி ஆண் செடி ஒன்று இருந்தால்தான் பெண் செடி காய்க்கும் என்று சொலகிறார்கள் ? இருக்கலாமா வெட்டிவிடலாமா ?

3. நிலக்கரி சாம்பல் செடிக்கு உரமா ? இல்லையா ?

கே. வி. சுப்பிரமணி,
கொத்தகூடம் போஸ்டு.

பதில்.—(1) கத்தரிச் செடியின் தண்டு மற்றும் காய்களை "லூசினுய்டஸ்" என்ற பூச்சி துளைத்து கெடுதல் விளைவிக்கும். செடிகளை நட்டு ஒரு மாதத்திற்குப் பிறகு மருந்து தெளிக்கத் தொடங்கி 15 நாட்களுக்கு ஒரு முறை, ஐந்து தடவைகள் தெளிக்கவேண்டும்.

தெளிக்க வேண்டிய மருந்து.—டி. டி. டி. 0·1 சத வீதம் அல்லது எண்டிரின் 0·02 சத வீதம்.

(2) பப்பாளி பெண் செடிகள் காய்ப்பதற்கு ஆண் செடியின் பூக்களிலிருந்து மகரந்தச் சேர்க்கைக்கு வேண்டிய மகரந்தத்தூள் கிடைக்கிறது. பத்து பெண் செடிகளுக்கு ஒரு ஆண் செடிதான் தேவை. மற்ற ஆண் செடிகளை வெட்டிவிடலாம்.

(3) நிலக்கரிச் சாம்பலில் பொட்டாஷ் சத்து (கே. 20) 0·1 சத வீதம் முதல் 0·4 சத வீதம் வரை உள்ளது. பயிர்களுக்கு எருவாக இதை உபயோகிக்கலாம். பொட்டாஷ் சத்து மிகக் குறைவாக இருப்பதால், நிலக்கரி சாம்பலை எருவாக உபயோகிக்க எக்கருக்கு 30,000 முதல் 1,20,000 ராத்தல் போடவேண்டும். இவ்வளவு அதிகமான அளவு நிலக்கரி சாம்பலை கையாளுவது, மிகச் சிரமமாகையால், எருவாகப் பயன்படுத்தும் பழக்கம் பெருவாரியாக இல்லை.

சூபர்பாஸ்பேட்

மணிலாக் கொட்டை விளைச்சலை மிகவும் அதிகரிக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?

சூபர்பாஸ்பேட் பயிர்களின் வளர்ச்சிக்கு முக்கியமான 3 போஷாக்குகளில் ஒன்று. குறிப்பாக சிறு நாற்றுகளின் வளர்ச்சிக்கும், நாற்றுகள் சீக்கிரமாக முதிர்வதற்கும், வேர்களும் தான்யங்களும் பெருகுவதற்கும் அத்தியாவசியமானது. சூபர்பாஸ்பேட்டில் தண்ணீரில் கரையக் கூடிய பாஸ்பாரிக் அமிலம் 16% இருப்பதால் இந்த உரம் பயிருக்கு மிக சீக்கிரமாகவும், எளிதிலும் கிடைக்கும்.

சூபர்பாஸ்பேட் மணிலாக் கொட்டை விளைச்சலை கணிசமாக அதிகரிக்க செய்கின்றது என்று பல சோதனைகள் மூலம் தெரியவருகிறது. நில வளத்திற்கு இன்றியமையாதது சூபர்பாஸ்பேட்.

சூபர்பாஸ்பேட் உங்கள் மணிலாப் பயிருக்கு அத்யாவசியம்

முழு விபரங்களுக்கு

தென் பிராந்திய மண்டலக்குழு

இந்திய உரச்சங்கம்,

தபால் பெட்டி 12, சென்னை - 1

FDS/FA/3A TM

கார்த்திகை-மார்கழி மாத விவசாயக் குறிப்புகள்

(ஏ. எச். எஸ். சர்மா, டி. ரகோத்தம ராவ், விரிவினைப் பிரிவு, கோவை.)

களைகளை அகற்றுங்கள் !

நம் நாட்டில் ஆண்டுதோறும் களைகளினால் பயிர்களுக்கு ஏற்படும் நஷ்டம், பயிரைப் பொறுத்தும், களைகளின் தாக்குதலின் தீவிரத்தைப் பொறுத்தும் 15 முதல் 30 சதவீதம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. சில களைகள் செடி ஒன்றுக்கு 80,000 விதைகள் வரை உற்பத்தி செய்கின்றன. களைகளின் விதைகள் வெகுநாள் வரை தங்கள் முளைக்கும் திறனை இழப்பதில்லை. ஆகவே, அவற்றைக் காலத்தே களைந்தெரியுங்கள்.

டொமாடில்லோ

தக்காளியைப் போன்ற பழத்தையுடைய 'டொமேடில்லோ' மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்த ஒரு காய்கறிப் பயிர். இது தக்காளியைவிட உருவத்தில் சற்று சிறியது. காய்கள் பழுத்தவுடன் பொன் நிறத்தை அடைகின்றன. இப் பழத்தின் பெரும்பகுதியை மெல்லிய உறைபோன்ற பாகம் மூடியிருப்பதால் இது "மெக்ஸிகன் தோல் தக்காளி" (Mexican husked tomato) எனப்படுகிறது. வைட்டமின் 'சி' சத்து நிறைந்த இதன் பழம் தக்காளியைவிடச் சற்று இனிப்பாகவும், மணமாகவும் இருக்கும். ஆகவே இதனை பச்சையாகவே உண்ணலாம்.

* இது தக்காளியைப் போன்றே பயிர் செய்யப்படுகிறது.

* நட்ட ஆறுவது வாரத்திலிருந்து காய்பிடிக்க ஆரம்பிக்கும்.

* ஒவ்வொரு செடியிலும் சுமார் 20, 30 பழங்கள் காய்க்கும்.

* ஒவ்வொரு பழமும் சுமார் 1 அவுன்சு எடையுள்ளது.

* எக்கருக்கு 15,000—20,000 ராத்தல் பழம் கிடைக்கும்.

தக்காளியைப் போன்றே காய்கறியாகவும் மற்றும் பல விதங்களிலும் இதை உபயோகப்படுத்தலாம். ஆனால் தக்காளியைப் போன்று சாறு தயாரிக்க அவ்வளவு உகந்ததல்ல.

பழ மரங்களைப் பயிரிடுக !

பழ மரங்களை நடுவதற்கு 3′×3′×3′ அளவுள்ள குழியை வெட்டி, நல்ல மண்ணுடன் ஆறு கூடை மக்கிய குப்பை உரம் அல்லது தொழு உரத்தோடு கலந்து குழியை நிரப்பவேண்டும். இதைத் தவிர குழிக்கு ஒரு ராத்தல் அம்மோனியம் சல்பேட், இரண்டு ராத்தல் சூப்பர் அல்லது எலும்புத்தூள், ½ ராத்தல் பொட்டாஷும் கலந்து இடலாம்.

சிறந்த மா அல்லது சப்போட்டா ரகங்களைத் தேர்ந்தெடுங்கள். இதற்கு உங்கள் விவசாய விரிவினை அலுவலர் உதவி புரிவார். மாவிற்கு ஆரம்ப காலத்தில் சிறிது கவனம் செலுத்தினால் போதும். சப்போட்டா மரம் அதிக கவனமின்றியே நிறைய பழங்களைத் தரும். நட்ட செடிகளுக்குத் தேவையான சமயத்தில் நீர்விட வேண்டும். செடிகளை பண்ணையிலுள்ள ஆடு மாடுகள் அண்டா வண்ணம் தக்க பாதுகாப்பு அளிக்கவேண்டும். ஐந்து ஆண்டு காலத்தில் மரங்கள் காய்க்கத் துவங்கும்.

மஞ்சள் மகசூல் அதிகரிக்க—

* அடியுரமாக எக்கருக்கு	20 வண்டி ..	தொழு உரம்,
	150 கிலோ கிராம்.	சூப்பர் பாஸ்பேட்,
	40 கிலோ கிராம்.	மியூரியேட் ஆஃப்பொட்டாஷ் (சாம்பல் சத்து குறைவிருந்தால்) இடவும்.
* மேலுரமாக எக்கருக்கு	100 கிலோ கிராம்.	கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் அல்லது அம்மோனியம் சல்பேட் இடவும்.

(இதனை இரு பாகங்களாகப் பிரித்து முதல் பகுதியை நடவிற்கு 2 மாதங்களுக்குப் பின்பும், இரண்டாம் பகுதியை இன்னும் ஒரு மாதம் கழித்தும் இடுதல் நலம்).

* இரசாயன உரத்தை பயிரிலிருந்து 4″ தூரத்திலும் 4″ ஆழத்திலும் வரிசையிலிட்டு மண்ணால் அணைக்கவும்.

நெல்

(நெல் ஆராய்ச்சி நிபுணர்)

செங்கற்பட்டு

சம்பாவில் தொடர்ந்து ஊடுழவு செய்தல், கலப்புக் கதிர் களைதல்.

வட ஆற்காடு

முன் போக சம்பா அறுவடை. பின்போக சம்பாவிற்கு 2-வது முறை இரசாயன உரமிடுதல்.

தென் ஆற்காடு

தாளடிப் பயிரில் ஊடுழவு செய்தல் ; கலப்புக்கதிர் களைதல் ; பூச்சி, நோய்களுக்கு மருந்தடித்தல்.

தஞ்சாவூர்

தாளடிப் பயிரில் தொடர்ந்து ஊடுழவு செய்து 2-வது முறை இரசாயன உரமிடுதல் ; சம்பா அறுவடை.

திருச்சி

தொடர்ந்து சம்பா, தாளடி நடவு, முதல் முறை இரசாயன உரமிடுதல். முன்போக சம்பா அறுவடை. பின்போக சம்பா, தாளடிப் பயிருக்கு 2-வது முறை இரசாயன உரமிடுதல் ; ஜப்பானிய ஊடுழ்வுக் கருவி யோட்டுதல்.

கோயம்புத்தூர்

நடவு முடிவு; 2-வது முறை இரசாயன உரமிடுதல், தொடர்ந்து கலப்புக் கதிர் களைதல், ஊடுழவு செய்தல். அறுவடைக்கு வந்த தினுசுகளை அறுவடை செய்தல்.

சேலம்

பின் போக சம்பாவிற்கு 2-வது முறை இரசாயன உரமிடுதல், 15 நாட்களுக்கொரு முறை ஜப்பானிய ஊடுழவுக் கருவியோட்டிக் களையெடுத்தல். முன்போக சம்பா அறுவடை.

மதுரை

பாசனப் பயிருக்கு 2-வது முறை இரசாயன உரமிடுதல்; களையெடுப்பு—சம்பா அறுவடை. நவரை நாற்றங்கால் தயாரிப்பு—கோ. 29, டீ. கே. எம். 6 போன்ற உயர்ந்த ரகங்களை விதைக்கவும்.

இராமநாதபுரம்

ஊடுழவு செய்தல், கலப்புக்கதிர் களைதல்.

திருநெல்வேலி

பாசனப் பயிரில் தொடர்ந்து ஊடுழவுக் கருவியோட்டிக் களையெடுத்தல், 2-வது முறை இரசாயன உரமிடுதல்.

சிறுதானியம், பயறு வகைகள்

(சிறுதானிய ஆராய்ச்சி நிபுணர்)

சென்னை தொகுதி

சில இடங்களில் ராகி விதைப்பு, இறைவை ராகி அறுவடை. முன்போகச் சம்பா அறுவடைக்குப்பின் பச்சைப் பயறு, உளுந்து விதைப்பு. புஞ்சை சிறுதானிய பயறு வகைகள் அறுவடைக்கு வரும்.

கோயம்புத்தூர் தொகுதி

இறைவை ராகி அறுவடை முடிவு; புஞ்சை சிறு தானிய, பயறு வகைகள் அறுவடைக்கு வரும்.

தஞ்சாவூர் தொகுதி

தினை, சாமை பயிர்களில் களையெடுப்பு; இறைவை கம்பு அறுவடை முடிவு. புஞ்சை சிறுதானிய வகைகளின் அறுவடைத் துவக்கம்.

மதுரை தொகுதி

புஞ்சை சிறுதானியக் காடுகளில் ஊடுழவு முடிவு, அறுவடைத் துவக்கம்.

பருத்தி

(பருத்தி ஆராய்ச்சி நிபுணர்)

கோயம்புத்தூர், சேலம், திருச்சி மாவட்டங்கள், மதுரை மாவட்டத்தில் சில பகுதிகள்.

இறைவைப் பருத்திக்கு 2-வது முறை பாலிடாலும், புஞ்சைப் பருத்திக்கு முதல் முறை என்ட்ரின் மருந்தும் அடித்தல். புஞ்சையில் முதல் முறை களையெடுப்பு முடிவு. கூன்வண்டு விழுந்த செடிகளைக் களைதல் 2-வது முறை ஏக்கருக்கு 100 ராத்தல் வீதம் அம்மோனிய சல்பேட் இடுதல்; பார் கலப்பையோட்டி மண்ணைக் கிளறிக் கொடுத்தல்; தத்துப் பூச்சி, காய்ப் புழுக்களையொழிக்க 3-வது முறை பாலிடால் (தாமிரம் கொண்ட நோய் மருந்துடன் கலந்து தெளித்தல்.

புஞ்சை கரிசல் நிலங்களுக்கு

விதைத்து 25-லிருந்து 35 நாட்கள் கழித்து, வரிசைகளில் 4–6" இடைவெளியில் செடிகளைவிட்டு மற்றவை களைக் களைதல். முன்போகப் பயிரில் கையால் களையெடுத்தல், தந்துலு அல்லது ஜூனியர் ஹோ ஊடுழவுக் கருவியோட்டுதல். பின்போகப் பயிரில் கையால் களையெடுத்தல்; ஏககருக்கு 12 காலன் தண்ணீரில் 1 அவுன்ஸ் பாலிடால்) பாலிடால் மருந்து அடித்தல்; பின் போகப் பயிரில் முதல் முறையும், முன்போகப் பயிரில் 2-வது முறையும் தந்துலு ஓட்டுதல். செடிகளுக்கு இடையே உள்ள களை களை கையால் நீக்குதல், கருவி ஓட்டவில்லையென்றால் களைகொத்தால் களை எடுத்தல்.

எண்ணெய் வித்துக்கள்

(எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிபுணர்)

நிலக்கடலை

செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள்.

மானாவாரி.—குறுகிய கால கொத்து ரகக் கடலை அறுவடை, அறுத்த கடலையைக் காயவைத்தல், பிந்தி விதைத்த பயிருக்கு 2-வது களையெடுப்பு. நீண்டகால கொடி ரகக் கடலை அறுவடை (எச். எம். குண்டகா நெ. 2 கருவியோட்டி அறுவடை செய்தல்).

கோயம்புத்தூர், சேலம், திருச்சி, நீலகிரி மாவட்டங்கள்

மானாவாரி.—அறுவடைக்குப்பின் தரிசாகவிடப்பட்ட வயல் களை உழுது பண்படுத்தல்.

இறைவை.—கோடை விதைப்புக்கு தோட்டக்கால் தயாரிப்பு. இரும்புக் கலப்பையால் 4-6 முறைகள் உழுதல், 10 வண்டி தொழுஉரம் அல்லது கம்போஸ்ட் உரமிடுதல்; கடைசி உழவின்பொழுது ஏக்கருக்கு 168 ராத்தல் சூப்பர் பாஸ்பேட், 84 ராத்தல் மூயூரியேட் ஆப் பொட்டாஷ், 84 ராத்தல் அம்மோனியம் சல்பேட் அல்லது இந்த இரசாயன உரங்களுக்கு பதிலாக 280 ராத்தல் கலவை உரம் போட்டு (நெ. 3) ஜூனியர் ஹோ கருவியோட்டுதல்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி.

மானாவாரி.—பிந்தி விதைத்த பயிருக்கு 2-வது முறை களையெடுப்பு. முன் விதைத்த பயிர் அறுவடைக்குவரும். எச். எம். குண்டகா நெ. 2. கருவியோட்டி அறுவடை செய்தல 'கொத்து' தினுசுக் கடலையைக் காய வைத்தல்.

தென்னை

தென்னந்தோப்பில் வரப்புகளை திருத்தியமைத்தல். அதிகப்படி நீரை கால்வாய்கள் வெட்டி வடித்தல். மரங்களுக்கிடையில் கோடை காலப்பயிர் செய்யாதிருந்தால் கொளுஞ்சி போன்ற பசுந்தாள் உரப்பயிர் விதைத்தல்.

பழம், காய்கறி வகைகள்

(தோட்டக்கலை ஆராய்ச்சி நிபுணர்)

சபோடா, கொய்யா, எலுமிச்சை அறுவடை; கோஸ், காரட், முள்ளங்கி விதைத்தல்; கத்தரி, தக்காளி, மிளகாய், அவரை, பாகல், புடல், பீர்க்கை, காரட், முள்ளாங்கி அறுவடை.

மலைப் பிரதேசங்களில் ஸ்ட்ராபெரி நடவு, உரமிடுதல்.

திராட்சை நடவு, கவாத்து செய்து உரமிட்டு மருந்து தெளித்தல். சாத்துக்குடி, எலுமிச்சை அறுவடை.

மலைப் பிரதேசங்களில் பழமரங்களுக்கு கவாத்து தொடங்கலாம். உருளைக்கிழங்கு (2-வது பட்டம்) அறுவடை.

விவசாயிகளுக்கு வேளாண்துறையால் வழங்கப்படும் சில சலுகைகள்

1. உள்ளூர் எரு உற்பத்திக்காக—

(அரசாங்க ஆணை எண் 974, கிராம அபிவிருத்தி, ஸ்தல நிர்வாகத் துறை 1962ம் ஆண்டு எப்ரல் மாதம் 17-ம் தேதி.)

(1959-ம் ஆண்டு எப்ரல் மாதம் 17-ம் தேதியிட்ட ஆணைப்படி மாட்டுத் தொழுவம், கம்போஸ்டு குழி அமைக்க ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 150 கடனாகவும் ரூ 50 மான்யமாகவும் வழங்கப்பட்டது).

1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் 17-ம் தேதியிட்ட புதிய ஆணைப்படி நிர்ணய அளவுள்ள மாட்டுத் தொழுவமும், கம்போஸ்ட குழியும் அமைக்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் கடன் ரூ. 250 வழங்கபபடுகிறது. மான்யமில்லை.

கடன் பெற நிபந்தனைகள்.—

(1) தொழுவம் 3 மாதங்களுக்குள் அமையப்பெற வேண்டும்.

(2) அரசாங்க நிர்ணயங்களுச்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

கடன் தொகை **5** வருடத் தவணையில் வசூலிக்கப்படும். இது பற்றிய இதர விவரங்களை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமிருந்து அறியலாம்.

தந்தையைப்போல் தனயன்...



ஆம், சில விஷயங்களில்தான்...முக்கியமான சிலவற்றிலோ? ஊஹூம்! ராமன் தன் தந்தையைப்போல் ஒரு விவசாயியாகத்தான் இருப்பான். ஆனால் அவன் நிலத்தை உழுது பயிரிடும் விதமே வேறுதான். தரத்திலுயர்ந்த விதைகளையே விதைப்பான். விஞ்ஞான ரீதியில் மாற்றி மாற்றிப் பயிரிடுவான். நீர்ப்பாசன வசதிகளை நன்கு பயன்படுத்துவான். ராலீஸ் தயாரிப்பதுபோன்ற சமநிலை உரக்கலவைகளைக்கொண்டு தனது நிலங்களை வளப்படுத்துவான். ராலீஸ் தயாரிக்கும் "மரம் மார்க்" உரங்கள் இந்திய விவசாயிகளுக்குத் தரமான, வளமான விளைச்சலை அளிக்கின்றன. ராலீஸ் உரங்களில் முதலீடு செய்யப்படும் 1 ரூபாய், 4 ரூபாய் அதிகப்படி விளைச்சலைத் தருகிறது.

RALLIS TREE BRAND FERTILISERS

ராலீஸ் இந்தியா லிட்.

இந்தியா முழுவதும்

RFY-39TAM

பயிர் பூச்சிகளுக்கு...



போரில் தோல்வியே...

பாரீஸ் பூச்சி நாசினிக் கலவைகளின் மகோன்னத பூச்சிநாச சக்தியினின்றும் பூச்சிகள் நழுவித் தப்புவது அசாத்யம். ஏனெனில் பாரீஸ் பூச்சி நாசினிகள் எல்லாவகைப் பயிர் பூச்சிகளையும் அடியோடு அழிப்பவையாகும்.

பென்ஸிக்ளோர்
டி. டி. டி
மலாதியான்
எண்ட்ரின்
ஆல்டிரின்

Parry's

பூச்சிநாசினி
கலவைகள்

.. மேலும் இதர, குறிப்பான விவரங்களுக்கு எழுதி விசாரிக்கவும்:
ஈஸ்ட் இந்தியா டிஸ்டில்லரீஸ் & ஷுகர் பாக்டரீஸ் லிமிடெட்.
(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
பெர்டிலைசர் இலாகா (I & F), டேர் ஹவுஸ், சென்னை-1

PZ-1304 TM

"வழிகாட்டி"

(நாடகம்)

(கே. எஸ். ஆலம்கீர், விரிவினைப் பகுதி, கோவை-3.)

காட்சி 8

இடம்.—விவசாய அலுவலகம்.

பாத்திரங்கள்.—சுந்தர், மேஸ்திரி மாடசாமி, அருணகிரி, பி. டி. ஓ., ஷண்முகம், டீன்.

(மேஸ்திரி தபாலைக் கொண்டுவந்து கிளார்க் அருணகிரியிடம் கொடுக்கிறான்.)

கிளார்க்.—(A. E. O.-வைப் பார்த்து) ஸார், தபால் எல்லாம் வந்திருக்கிறது, பாருங்கள்.

சுந்தர்.—(தபாலைப் பார்த்துக் கொண்டே) டி. ஏ. ஓ.-விடம் இருந்து லட்டர் வந்திருக்கே. (லெட்டரைப் படிக்கிறார்).

"ஸ்ரீ சுந்தருக்கு..உங்களைப் பற்றியும் உங்கள் நிர்வாசத் திறனைப் பற்றியும் குறைகூறிப் பல கடிதங்கள் மாவட்ட அலுவலகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. உங்களை நீங்கள் திருத்திக் கொள்வீர்கள் என்ற எண்ணத்தில் இந்த எச்சரிக்கைக் கடிதத்தை எழுதுகிறேன். முன்னேற்றத்தை எதிர்பார்க்கிறேன்."

மாவட்ட விவசாய அதிகாரி.

சுந்தர்.—சே..என்ன உலகம். நேர்மையாக நடந்தால் எச்சரிக்கை. கடமையை எடுத்துச் சொன்னால் கடும் சொற்கள்..

(அப்போது வெளியில் A. E. O.-வை எதிர்த்து ஊர் வலம் வருவோர் கோஷமிடுகின்றனர்.)

"சுந்தர் "—" ஒழிக"

"டிமான்ஸ்டிரேட்டர் "—" ஒழிக"

"விவசாய ஆபீஸ் "—" மூடப்படட்டும்"

சுந்தர்.—ஆமாம்..சுந்தர் ஒழிக டிமான்ஸ்டிரேட்டர் ஒழிக. விவசாய ஆபீஸ் மூடப்படட்டும். உம்..சுந்தர் ஒழியட்டும். விவசாய ஆபீஸ் மூடப்படட்டும்..நீங்களாவது நன்றாக இருந்துவிட்டுப் போங்கள். நன்றாக இருந்து விட்டுப் போங்கள். ஐயோ கடவுளே! இவங்களுக்கு எப்போத்தான் கண் திறக்குமோ!

பி. டி. ஓ.—(உள்ளே நுழைந்து கொண்டு) மிஸ்டர் சுந்தர் என்ன இது. ஊரெல்லாம் உங்களுக்கு எதிரா கோஷமிட்டுக் கொண்டு போகிறார்களே..சே சே! உங்களை ஒரு Responsible Officer..ன்னு நினைச்சேன்..I am very sorry Mr. Sundar I am very sorry.

(போகிறார்)

மேஸ்திரி.—சார்..இதெல்லாம் அந்த மாஜி ஜமீன்தார் வேலையாகத்தான் இருக்கும். இதுக்கெல்லாம் கலங்கப்படாது ஸார். நம்ம ஊர் ஜனங்க நல்லவங்க ஸார், நாளைக்கு வேணுமின்னு எங்கூட வாங்க. அவங்க உண்மையான மனசை தெரிஞ்சிட்டு வரலாம்.

அருணகிரி.—சார் தபால்லே உங்களுக்கு ஒரு Private letter இருந்துதே பாத்தீங்களா.

சுந்தர்.—(கடிதத்தைப் பார்த்து விட்டு மகிழ்ச்சியுடன்) மிஸ்டர் அருணகிரி எங்க காலேஜ் டீன் இங்கே வர்ரதாக எழுதியிருக்கார். இன்னிக்கே வர்ராராம்..

அருணகிரி.—ஓஹோ..என்ன சார் இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடனே உங்க கவலையெல்லாம் பறந்தே போயிடுச்சே.

சுந்தர்.—இல்லீங்க மிஸ்டர் அருணகிரி எங்க டீன்-க்கு என்னைக் கண்டா ரொம்ப பிடிக்கும். அவருக்கு பிடித்தமான Student நான்..பாருங்களே மதுரைக்கு Camp வந்தவரு என்னைப் பார்க்க இங்கே வர்ரார்.

அருணகிரி.—உண்மையா உழைக்கிறவங்களைக் கண்டா எந்த ஆபீஸருக்குத்தான் பிடிக்காது ஸார்.

(வெளியில் கார் சப்தம் கேட்கிறது)

சுந்தர்.—மேஸ்திரி கார் சப்தம் கேட்குது. ஒருவேளை அவராத்தான் இருக்கும். பாரு..

(டீன் உள்ளே நுழைகிறார்)

(மூவரும் அடக்கத்துடன் வணங்குகின்றனர்)

DEAN.—Mr. Sunder, How do you do (Gives shake hand)

SUNDER.—Quite O. K. Sir. Please take your seat.

(Dean sits)

டீன்.—என்னப்பா சௌக்கியமா இருக்கிறாயா. புது குளத்தூர்லே நீ செய்த நல்ல காரியங்களையெல்லாம் கேள்விப்பட்டேன். பாராட்டிட்டு போலாம்னு வந்தேன்.

சுந்தர்.—Thank you sir.

டீன்.—But I was very much surprised to see a huge procession going on shouting slogan against you! What is wrong? What is the reason?

சுந்தர்.—அதை நான் எப்படி சார் சொல்றது எல்லாம் இந்த ஊர் மாஜி ஜமீன்தார் செய்யற வேலை சார்.

டீன்.—Ex. Jamindar. Let met have a clear picture Mr. Sundar.

சுந்தர்.—அவர் ஒரு பெரிய பணக்கார ஜமீன்தார் சார். அவருக்கு Improved agricultureன்னு பிடிக்காது. விவசாயிகள் எல்லோரும் தன்னுடைய காலைக் கட்டிக் கிட்டுத்தான் கிடக்கணும். முன்னேறக்கூடாதுங்கறது தான் சார் அவருடைய ஆசை.

டீன்.—அப்படியா! என்ன பயித்தியக்கார மனுஷனா இருப்பான்போலே இருக்கே.

சுந்தர்.—சார் நான் விவசாயிகளைத் திருத்தி அவங்களுக்கு Improved Agriculture ஐ Teach பண்ணலாம்னு

முயற்சி செய்தேன். ஆனு விவசாயிகளெல்லாம் ஜமீன் தார் பகையைத் தேடிக்கிறதை விட முட்டாள்களாகவே இருக்கிறது மேல்னு நினைக்கிருங்க ஸார்.

டீன்.—So What are you going to do ?

சுந்தர்.—ஒவ்வொரு விவசாயி வீட்டுக்கும் போய் Individual ஆ Contact பண்ணி நன்மைகளை எடுத்துச் சொல்லப் போறேன். எல்லோருக்கும் உண்மை தெரிஞ்சு அவங்க ஒன்றுபட்டா அப்புறம் ஜமீன்தார்னுலே ஒண்ணும் பண்ண முடியாது ஸார்.

சுந்தர்.—ஆனு உண்மை தெரிஞ்சுக்காமே டி. எ. ஓ. வார்னிங் கொடுத்திருக்கார் சார்..

டீன்.—That's all usual, You don't worry நான் டி எ. ஓ.வை மீட் பண்ணி விபரத்தை சொல்றேன். Don't loose heart. You will succeed.

சுந்தர்.—சார் எனக்கு இவ்வளவு தூரம் Encouragement இருந்தாப் போதும் சார். இன்னிக்கு டி. எ. ஓவுடைய லெட்டர் வந்ததும் மனசு உடைஞ்சு போச்சு சார். Resignation கூட எழுதிடலாம்ன்னு நினேச்சேன்.

டீன்.—சே..சே..என்ன சுந்தர். உன்னேப்போல தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் உடையவங்க இப்படி மனசை விடலாமா.

Don't worry You proceed with your work. You will surely succeed.

நான் வரட்டுமா டைம் ஆச்சு Wish you best of luck.

காட்சி—9

இடம் :—வயலோரம்.

பாத்திரங்கள் :—டெமான்ஸ்ரேட்டர், மேஸ்திரி, மேஸ்திரியின் மைத்துனன் மூவரும் வயல்களை சுற்றிப் பார்த்துவிட்டு வருகின்றனர்.

(மேஸ்திரியின் கையில் கொஞ்சம் செஸ்பேனியா நாற்றுகளும், கொஞ்சம் இனிரிசீடியா நாற்றுகளும் இருக்கின்றன. கையில் ரத்தக் கறையுடன் டிமான்ஸ்ரேட்டர் இருக்கிருர். மாரிமுத்து வயலில் நிற்கிருர்.)

டிமான்—(விவசாயியைப் பார்த்து) ஐயா ! கொஞ்சம் தண்ணீர் இருந்தால் கொடுங்களேன்.

மாரிமுத்து (விவசாயி)—(கொஞ்சம் பச்சாதாபத்துடன்) தண்ணீயா? இல்லிங்களே ஸார்....எதுக்கு தண்ணீ ?

டிமான்—ஒண்ணுமில்லே....கையிலே காயம்பட்டிருச்சு.. அதைக் கழுவலாமின்னு கேட்டேன்.

மேஸ்திரி—காயமா ?....எப்படி பட்டுச்சு....

மாரிமுத்து—(கையைப் பார்த்து) சார் ! ரத்தம் வருதுங்களே. இருங்க (தலையிலுள்ள துண்டை எடுத்து கிழித்து கையில் கட்டுகிருர்) எப்படி காயம் பட்டுச்சு.

ஆனேயப்பன்—எல்லாம் உங்களுக்காகத்தான் பாடுபடராரு. உங்க நிலங்களையெல்லாம் சுத்தி பார்த்துவிட்டுவரும் போது எங்கே பார்த்தாலும் களையும், காட்டுப் புல்லுமா கிடந்துச்சு. அதைப்பார்த்து பயிரெல்லாம் கெட்டுப் போயிடுமேன்னு சொல்லி, அந்தக் களைகளை புடுங்கி எறிஞ்சுகிட்டிருந்தாரு. அங்கே இருந்த கோரை கையை அறுத்திடுச்சு.

மாரிமுத்து—இவ்வளவு அக்கரை நீங்க எடுத்துக்கிருவீங்கன்னு நாங்க கனவிலேயும் நினைக்கலே சார். இந்த களைகளினுலே தொந்தரவு ரொம்ப ஜாஸ்தி சார். ஜமீன்தார்கிட்டே இருந்து விதையை வாங்கி விதைச்சும், அதிலே கல்லும் மண்ணும், வேறே விதைகளும் இருக்குது. அதனுலே பாதிப்பயிர் நாசமாயிப் போகுது....

டிமான்—இந்தக் குறையெல்லாம் தீரணும்னு, நான் கொடுக்கிற விதையை நீங்க விதைக்கணும். மக்களுடைய சௌகர்யத்துக்காகவே இருக்கக்கூடிய அரசாங்கம் மக்களுக்குத் துரோகம் செய்யுமா ?

ஆனே—எய்யா....அப்படி உங்களுக்குத் துரோகம் செய்யணும்னு இவரு எதுக்கையா கையிலே ரத்தம் வடிய போய் களை எடுக்குராரு.

மேஸ்திரி—இவங்களுக்கெல்லாம் என்ன சொன்னுலும் ஏறுது சார். தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக்கிர்ர ஆனேயும் ஒண்ணு, இவங்களும் ஒண்ணு சார்.

ஆனே—மச்சான்....என்ன நம்மையே தாக்குறியே.

மேஸ்திரி—உன்னேயில்லேடா. யானேயைச் சொன்னேன்.

ஆனே—அதுதானே கேட்டேன். இல்லே சுட்டுத் தள்ளிப் புடுவேன்.

மாரி—(உற்சாகத்துடன்) சார்....மேஸ்திரி சொல்றது மாதிரி நாங்க எல்லாம் முட்டாளுங்கு இல்லே சார். ஏதோ ஜமீன்தாருடைய விரோதம் கூடாதேன்னு பார்த்தேன். ஆதனுல் நஷ்டமே தவிர வேற ஒண்ணுமில்லே....இருக்கட்டும் என்ன வந்தாலும் சரி சார்.. நீங்க சொல்றதுலே எனக்கு அசையாத நம்பிக்கையிருக்கு. எனக்கு பொறுக்கு விதைகளைக் கொடுங்க. திருந்திய முறைகளைச சொல்லுங்க. இந்த ஊரு மக்களுக்கு நான் ஒரு எடுத்துக்காட்டா இருக்கேன்.

டிமான்—சபாஷ்.... சபாஷ்....மேஸ்திரி நமக்கு வெற்றி வெற்றி. இனி பாரு என்ன நடக்குதுன்னு.

மேஸ்திரி—முதல்லே இந்த நாத்துக்களைக் கொண்டு போய் உங்க வயல் வரப்புகள்ளே நடுங்க. நல்ல பசுந்தாள் உரம் இதை அறுத்து நெல்லுக்குப் போடுங்க அப்புறம் பயிரைப் பாருங்களேன்.

டிமான்—முதல்லே இவருக்கு நல்ல விதைகளைக் கொடு, இந்த ஊருலே அதிகமாயிருக்கு ஆகையாலே கோ 25 கொடு. பருத்தி போடுறீங்களா....கொடுப்பா.. போடட்டும். ஐயா வாங்க போவோம். உங்களாலே இந்த கிராமமே முன்னேறப் போகுது. அந்தப் பெருமை உங்களுக்குக் கிடைக்கப் போகுது பாருங்க..

மாரிமுத்து—எனக்கு பேரும் புகழும் வேண்டாம் சார்.... என்னேப்போல் மற்ற விவசாயிகளும் நல்ல சாகுபடி செஞ்சு நிறைய லாபம் பெறணுங்க. அவ்வளவு தானுங்க.

மேஸ்திரி—கண்டிப்பா எல்லோரும் சுபிட்சமா வாழுவாங்க....பாருங்க.

ஆனே—சார் நேரமாகுது. வாங்க போகலம்ா.

(எல்லோரும் போகிருர்கள்)

—திரை—

திறமையான விவசாயப் பண்ணை நிர்வாகத்திற்கு விளைநில பதிவுப் புத்தகமே

(எம். ஆர். இருதயராஜ், பி. எஸ். ஸி. (ஏ. ஜி.)., உதவி விவசாய ஆசிரியர்.

நல்ல விவசாய பண்ணை நிர்வாகத்திற்கு உதவும் விளைநில பதிவுப் புத்தகத்தின் முக்கியத்துவத்தை இன்னும் விவசாயிகள் அறிந்ததில்லை. அநேக விவசாயிகள் தங்கள் பண்ணைகளை, எந்த விதமான விளைநில பதிவுப் புத்தகமும் இல்லாமலே நிர்வாகம் செய்கிறார்கள். அப்படியே அவர்கள் வைத்திருந்தாலும் அவை தெளிவற்றவைகளாகவும், பிற்காலத்திற்குப் பயனற்றதாகவுமே இருக்கின்றன. நல்ல விவசாயப் பண்ணை நிர்வாகத்திற்கு உன்னிப்பாகப் பார்த்தறியும் தன்மையும், சிறந்த நினைவுச் சக்தியும் இன்றியமையாதவை. விவசாயியின் அனுபவம், விவரங்களை நினைவில் வைத்துக் கொள்வதும், அவைகளைக் கொண்டு செயல்படுவதையும் பொருத்தது. எப்படித்தான் ஒருவரது நினைவுச் சக்தி அதிக சிறந்ததாக இருந்த போதிலும் அவரால் எல்லாவற்றையும் மனதிலே இருத்துவது என்பது கடினம். அதற்காக விளைநில பதிவுப் புத்தகங்களை அவர் நாட வேண்டிவரும்.

விளைநிலப் பதிவுப் புத்தகம் ஒரு முக்கியமான பதிவுப் புத்தகம். ஏனெனில், விவசாய பண்ணை நிர்வாகத்திலுள்ள குற்றம் குறைகளைக் கண்டு பிடிப்பதற்கும் அக்குறைகளைப் போக்குவதற்கும் அது பயன்படுகிறது. சில விவசாயிகள் தங்கள் விருப்பத்திற்குகந்தவாறும், தங்கள் தேவைகளைப் பொறுத்த முறையிலும் ஒரு சில பதிவுப் புத்தகங்களை வைத்திருக்கிறார்கள். உதாரணமாக, மேலை நாடுகளில் மாடு, கோழி, ஆட்டுப் பண்ணைகளுக்கு பதிவுப் புத்தகங்கள் கண்காணிக்கப்படுகின்றன. இந்த பதிவுப் புத்தகங்கள், ஆடு, மாடு, கோழிகளின் வம்ச விளக்கம், கொடுத்த தீனியைப் பற்றிய குறிப்பு, இப் பண்ணைகளுக்கு கிடைக்கும் லாபம் போன்றவற்றின் சரியான குறிப்புகளைக் காட்டும். இவை பண்ணைகளை மேலும் திறம்பட நிர்வகிக்க பெரிதும் உதவுகின்றன.

இதே போல் விவசாயப் பண்ணையில் பயிரிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு வகை நிலத்திற்கும் ஒரு பதிவுப் புத்தகம் வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் இந்த விஷயத்தில் அதிக கவனம் செலுத்துவதில்லை. இவ்விளைநிலப் பதிவு புத்தகங்கள் விவசாயப் பண்ணையிலுள்ள வெவ்வேறு நிலங்களின் விளைச்சல் விவரங்களைச் சுருக்கமாகக் காட்டும். இதில் முக்கியமாக பதிவுசெய்ய வேண்டியவை:—

(1) கையாளப்பட்ட பயிர் மாற்றம் (2) இடப்பட்ட உரம், அதன் அளவு (3) விதைக்கப்பட்ட விதையின் அளவு, ரகம் (4) மகசூல் (5) லாபம், நஷ்டம் முதலியன. இக் குறிப்புகள் நவீன முறையில் பயிர் செய்வதற்கு வேண்டிய புதிய சிந்தனைகளை விவசாயிகளுக்கு நல்கும்.

விவசாயிகளின் உபயோகத்திற்கு விளைநில பதிவுப் புத்தகத்தின் நகல் ஒன்று கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

வயல் நிர். 15. வயல் விவரம்:— சமநிலம் ; மண் : இருமண்பாடு; மொத்த பரப்பு: 4·90 ஏக்கர்.

வருடம்.	பயிரும் அதன் ரகமும்.	பரப்பு (ஏக்கரில்.)	விதைப்பு நாள்.	விதை அளவு (ராத்தலில்.)	உரம் இட்டது.	அறுவடை தேதி.	ஏக்கருக்கு: தானியம் (ராத்தலில்).	ஏக்கருக்கு: வைக்கோல் (ராத்தலில்).	ஏக்கருக்கு: மொத்த மதிப்பு ரூ. ந.பை.	ஏக்கருக்கு: இலாபம் (அ) நட்டம் ரூ. ந.பை.
1956—57	ராகி கோ. 2	4·90	10— 7—56	30	19 டன் தொழு உரம்.	6—11—56 21—11—56 2—12—56 3—12—56	1,1[illegible]8	1,621	1[illegible]5·31	24·00
	சோளம் கோ. 12	4·90	22— 2—57	90	18 டன்	3— 6—57	630	4,814	178·60	59·75
	ஏ.எஸ். 7589		8— 3—57	60	தொழு உரம்.	14— 6—57				
1957—58	பருத்தி எம்.சி.யு 1.	4·90	8— 9—57 11— 9—57	70	900 ராத்தல் அம்மோனியம் சல்பேட்.	17— 1—58 13— 4—58	401 ராத்தல் பருத்தி	..	246·00	108·93 *

* வேர் புழுவினால் மகசூல் குறைந்தது.

வயல் நிர். 15. வயல் விவரம்:— சமநிலம்: மண்; இருமண்பாடு; மொத்தப் பரப்பு: 4·90 ஏக்கர்.

வருடம்.	பயிரும் அதன் ரகமும்.	பரப்பு (ஏக்கரில்.)	விதைப்பு நாள்.	விதை அளவு (ராத்தலில்.)	உரம் இட்டது.	அறுவடை தேதி.	ஏக்கருக்கு தானியம் (ராத்தலில்).	வைக்கோல் (ராத்தலில்).	மொத்த மதிப்பு ரூ. ந.பை.	இலாபம் (அ) நட்டம் ரூ. ந.பை.	
1958—59	ராகி கோ. 7	4·90	6—5—58	30	50 டன் தொழு உரம்.	1—8—58 14—8—58	869	8,367	181·23	121·07	†
	சோளம் கோ. 1	4·90	20—8—58	140	50 டன் தொழு உரம்.	30—12—58 10—1—59	19	4,862	133·96	28·17	†
	ராகி கோ. 7	4·90	6—3—59 21—3—59	30	50 டன் தொழு உரம். 300 ராத்தல் அம்மோனியம் சல்பேட்.	1—8—59 14—8—59	869	8,367	181·23	121·07	†
1959—60	பருத்தி எம.சி.யு. 1	4·90	7—9—59 27—9—59	51	38 டன் தொழு உரம். 980 ராத்தல் அம்மோனியம் சல்பேட்.	28—1—60 9—5—60	672 ராத்தல் பருத்தி	..	360·00	187·70	

† தொடர்ச்சியான மழையினால் மகசூல் குறைவு.

இப் புத்தகத்தில் ஒவ்வொரு நிலப் பகுதிக்கும் ஒரு பக்கம் ஒதுக்கவேண்டும். ஒவ்வொரு வருடமும் கீழ்க்கண்ட குறிப்புகளை அவ்வப்பொழுது பதிவு செய்யப்படவேண்டும். குறிப்பிட்ட பத்தியில் பயிருக்கு ஏற்பட்ட நோய், மகசூலின் ஏறக் குறைவு, அதன காரணம் இவைகள் குறிக்கப்பட வேண்டும். நஷ்டத் தொகையை சிவப்பு மையினால் எழுதவேண்டும்.

இவ்வகைப் பதிவுப் புத்தகங்கள் நீண்ட நாள் உபயோகிக்கப்படுமானால் மிக்க பலனுள்ளதாகவும், மதிப்புள்ளதாகவும் இருக்கும். இதன் மூலம் தங்கள் பண்ணைகளில் அதிக மகசூல் எடுக்க முடியும் என்பதை திட்டவட்டமாக நிர்ணயிக்கவும், தங்கள் நினைவு சக்தியின் தவறுகளை நீக்கவும் முடியும். ஆகவே, விவசாய பெருமக்களே ! நீங்கள் உங்கள் பண்ணையில் விளைநில பதிவு புத்தகம் ஒன்றை இன்றே எழுதத் தொடங்குங்கள்!

பஞ்சாயத்து செய்தி

உள்ளூர் எருக்கள் அபிவிருத்தித் திட்டம் கம்போஸ்ட் எரு பயிற்சி முகாம்

சங்ககிரி வட்டாரம், சேலம் மாவட்டம்.

ரா. கஸ்பார் அமல்தாஸ், வட்டார வளர்ச்சி அதிகாரி, சங்ககிரி.

உள்ளூர் எருக்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சங்ககிரி வட்டாரத்தில் "கம்போஸ்ட் பயிற்சி முகாம்" 4—9—62 முதல் 10—9—62 வரை நடத்தப்பட்டது. அப்போது மேற்படி முகாமிற்கு 4—9—62-ம் தேதி அன்று சங்ககிரி கோட்ட ஆட்சித் தலைவர் திரு டி. ஈ. தருமகண்ணு, பி. ஏ., அவர்கள் தலைமை தாங்க, முகாமை உயர்திரு கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர், எம். எல். ஏ. துவக்கி வைத்தார். மற்றும் அன்றும் மற்ற 4 நாட்களிலும் . 100 கேந்திர விவசாயிகள் பயிற்சி முகாமில் கலந்துகொண்டு அன்றாடம் முறையே உள்ளூர் எருக்களின அபிவிருத்தித் திட்டமும் அவசியமும் பற்றி திரு ரா. கஸ்பார் அமல்தாஸ், பி. ஏ. பி. எல். வட்டார வளர்ச்சி அதிகாரி, திரு என். விஸ்வநாதன், விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, திரு டி. எஸ். சுந்தரம், உரக் கலவை ஆய்வாளர், மற்றும் சுகாதார ஆய்வாளரும் சொற்பொழிவு ஆற்ற, பயிற்சி பெற்றனர். 9—10—62 அன்று மேற்படி கேந்திர விவசாயிகளை கோவை விவசாய கல்லூரிக்கு சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டு திரும்பப்பட்டது. 10—9—62 அன்று நிறைவிழாவின் போது திரு எஸ். கந்தசாமி கவுண்டர், சேர்மேன், சங்ககிரி அவர்களால் நற்சாட்சி இதழ்கள் வழங்கப்பட்டு முகாம் இனிது முடிந்தது.

பூச்சி, பூசண நோய்களைத் தொலைக்கச் சிறந்த கருவி

தூவானம் செய்ய



இந்த எல்லா ஸ்பிரேயர்களும் மானியத் திட்டத்தின்கீழ் வழங்க, தமிழ்நாடு விவசாய இலாகா நெறியாளரால் 'ரேட் கான்ட்ராக்ட்' திட்டத்தின்படி அங்கிகரிக்கப்பட்டவை. உங்கள் வட்டார விவசாய விளக்குனர் மூலமாகவோ, விவசாய வளர்ச்சி அதிகாரி மூலமாகவோ இந்த ஸ்ப்ரேயர்களை நீங்கள் பெறலாம்.



கேடார்
அசைப்பு ஸ்ப்ரேயர்

200 ராத்தல் அழுத்த சக்தியுடன் ஒரே மாதிரியாகத் தொடர்ந்து தூவாணம் செய்யும்.

மூன்று விதங்களில்
தூவானம் செய்யும் ஹை-ட்ரீ
லான்சுடன்கூடிய கேட்டார்
அசைப்பு ஸ்பிரேயர்

எல்லா மரங்களுக்கும், நிலக்கடலை, தோட்டப் பயிர்களுக்கும் உபயோகியுங்கள்.



கையாலும், சக்தியாலும் இயக்கும்
இதர பல ஸ்ப்ரேயர்களும்,
டஸ்டர்களும் நாங்கள்
தயாரிக்கிறோம்.



மாருத்
கையழுத்த ஸ்ப்ரேயர்

நாற்றங்காலிலும், விளைநிலப் பயிர்களிலும், பூச்சி பூசண நோய்களைக் கட்டுப்படுத்தத் தகுந்தது.

மற்ற விபரங்களுக்கு
கீழே கண்ட
விலாசங்களில் விசாரியுங்கள் :

தயாரிப்பாளர்கள்

அசைப்பு ஸ்ப்ரேயர்
கேடார்-கோ.·.பி

பாக்கு, தென்னை மரங்களுக்கு உபரோகியுங்கள்.

போன் எண்கள் { 84221 / 84245

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

தந்தி : கில்லோகஸ்ட் மலாடு.

மலாடு—பம்பாய் 64.

ஏஜெண்டுகள் :

ரங்கஸ்வாமி அண்டு கோ.,

03, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு, பெங்களூர்-2, மைசூர் ராஜ்யம்.
தந்தி : ஹோன்விட் போன் : 2971.

அறந்தாங்கியில் விவசாயக் கண்காட்சி

(**எஸ். பாண்டிபெருமாள்,** மாவட்ட விவசாய அலுவலர், பட்டுக்கோட்டை.)

அறந்தாங்கியில் கொலுவீற்றிருக்கும் ஸ்ரீ வீரமாகாளி யம்மாளின் பெரும் உற்சவத்தையொட்டி 1962-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ந் தேதி முதல் ஒரு வாரத்திற்கு விவசாயக் கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டது. இதனை பட்டுக்கோட்டை மாவட்ட விவசாய அதிகாரி திறந்து வைத்தார்.

இப்பகுதி வறண்ட பிரதேசமானதால் முந்திரி சாகுபடியை ஊக்குவிப்பதன் பொருட்டு முந்திரிக்கன்று ஒன்று நடப்பட்டது. அதன் சாகுபடி விவரங்கள் ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்யப்பட்டன. திருந்திய தென்னை சாகுபடி, கம்போஸ்ட் தயாரிக்கும் முறை, ஜப்பானிய முறை சாகுபடி முதலியவை நிருபணங்கள் மூலமும் விளம்பர சாதனங்கள் மூலமும் விளக்கிக் காட்டப்பட்டிருந்தன.

மேலே யானை கட்டி போரடித்தல்.
அதனடியில் "விவசாயம்" தெய்வம் என்பதாக அமைக்கப்பட்ட மூலக்கிரகம்.

கண்காட்சியில் விவசாயக் கருவிகளின் மாதிரிகள், பயிர்ப் பாதுகாப்பு முறைகள், சிறு தானிய, எண்ணெய் வகைகளின் பொறுக்கு வித்துக்கள், காய்கறி, பழ வகைகள், மாதிரிகள் முதலியவை அழகாக வைக்கப்பட்டிருந்ததையும், கால்நடை, கோழி வளர்ப்பு சம்பந்த விளம்பர சாதனங்களையும், மக்கள் திரள் திரளாக வந்து கண்டு களித்தனர்.

மற்றும், ஐந்தாண்டு திட்டத்தின் பல அம்சங்களின் மாதிரிகளும் காட்சியில் இடம்பெற்றிருந்தன. சிறப்பாக "யானை கட்டிப் போரடித்தல்" என்பதன் விளக்கம் எல்லோர் மனதையும் ஒருங்கே கவர்ந்தது.

இவ்வாறு மிகவும் அழகாக அமைந்த இவ் விவசாயக் கண்காட்சியானது இந்தப் பகுதியிலேயே இது தான் முதல் தடவையாக இருந்ததால் இதனை சுமார் 10,000 விவசாய மக்களும், பொது மக்களும் கண்டு களித்தனர்.



தரைப்படமாக அறந்தாங்கி பஞ்சாயத்து யூனியனில் நடந்த வேலைகளை உபகரணங்களை கொண்டு அமைத்துக் காட்டியதையும், "யானை கட்டி போரடித்தல்" என்ற பழங்கால பெருமையும், கவுன்சிலர்களும், கூட்டமன்றத் தலைவரும், இப்பகுதி M. L. A., அவர்களும் பார்வையிடுகிறார்கள்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1962

பருத்தி



இடையுழவு கருவி கொண்டு சிக்கன முறையில் இடையுழவு செய்தல்.

பருத்தியைத் தாக்கும் பூச்சிகளை ஒழிக்க "பாரத்தியான்" தெளித்தல்.

சமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாய இலாகா தலைவரால் வெளியிடப்பட்டது.